# சோதிடமலர்

# SOTHIDA MALAR





உள்ளே.........

அதிஷ்ட எண் ஞானம்
சைவவிரதங்களும் விழாக்களும்
சந்தேக நிவிர்த்தி, ஆய்வுமன்றம்
சுபமுகூர்த்தம் வைத்தல்

விபவ ஹூ ஐப்பசி மீ (17-10-88—15-11-88) ரூபா: 4-00

உ

# ஜோதிடமலர்

SOTHIDA MALAR

மலர் 11 * இதழ் 7

ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

*

விபவ ௵ ஐப்பசி ௴

( 17 - 10 - 88 )

ஜயவிஷ்ணு ஜநப்ரிய வீரநரேசா
ஜயஹரு ஜநப்ரிய ஹருநர|
ஜயதேவ விபாவ கருணாகர
வரிவாருய தாரக தாரகரோ||

* * *

அஞ்சலென் றேயருளாய் முருகா வடியார்க்கருளும்
சஞ்சலந் தீர்க்குந் தயாநிதியே நின்தகைமைகண்டு
கஞ்சனும் மாலுமுக் கண்ணனும் ஆயிரங்கண்ணனுமே
கெஞ்சி நின்றுருன் மலரடிக்கே கிருபாகரனே''

## பாபஞானம்

பாபம் என்னும் சொல்லில் புண்ணியமும் அடங்கியிருக்கிறது. ஏனெனில் ஒரே செயல் பயன்படுத்துவதற்கு ஏற்றவாறு புண்ணியமாகவோ பாவமாகவோ காட்சி கொடுக்கிறது. ஞானமல்லாதவர்கள் கர்மத்தை முறைதவறிச் செய்து அதைப் பாபச்செயலாக்குகின்றனர். ஞானவான்கள் அதே செயலை (கர்மத்தை) முறையாகச் செய்து அதைப் புண்ணியமாக மாற்றுவதுமல்லாது கர்மபந்தத்திலிருந்தும் விடுபடுகின்றனர்.

— கீதை.

## பரமபதம்

கடலில் அலை தோன்றி, கடலில் நிலைபெற்றிருந்து, கடலில் ஒடுங்குவதுபோல இவ்வுலகமும் இறைவனிடமிருந்து தோன்றி இறையிடமே இருந்து அவரிடமிருந்து மறைகிறது. எனவே அவ்விறைவன் யாண்டும அதற்குப் பெருநிலம் அல்லது பரம்தாமம் எனவாகின்றார். இப்பரந்தாமமே மஹாவிஷ்ணுவுடைய பரமபதம் ஆகின்றது.

இம்மாத விசேடங்கள்

## தீபாவளிப்பண்டிகை

தீபங்களை வரிசையாக வைத்துக் கொண்டாடப்படும் முகமாக ஏற்பட்ட இப்பண்டிகை இப்போது நம்நாட்டில் மாற்றமடைந்து எண்ணெய் ஸ்நானம், புத்தாடையணிதல் பக்ஷண விருந்துகள் என்றெல்லாம் கொண்டாடப்படுகிறது. ஆதியில் மக்களை இம்சைப்படுத்தி வந்த நரகாசுரனை கண்ணபிரான் சத்தியபாமாவின் உதவியுடன் வதம் செய்தான். அவ்வசுரனின் கொடுமையிலிருந்து விடுபட்ட மக்கள் (இறக்கும்போது கண்ணனருளால் சிறிது ஞானம் பெற்ற இவ்வசுரனின் பிரார்த்தனைப்படி) மகிழ்ச்சியுடன் துன்பங்களுக்கெல்லாம் முழுக்குப் போடவேண்டும் என்று நரகாசுரவதம் செய்த ஐப்பசி மாத கிருஷ்ண சதுர்த்தியன்றிரவு எண்ணெய் அரப்பு வைத்து முழுகி பழையன கழிதலும் புதியன புகுதலும் போல புத்தாடைகள் புனைந்து குழந்தைகளுடன் முக்கியமாக பெண்களும் பெற்றோர்களும் கண்ணபிரானை நினைத்து தம் நல்வாழ்வை வளமாக்கிக் கொள்கின்றனர். மேலும் அசுரனின் கொடூரமான ஆட்சியின்போது மக்கள் மனமெல்லாம் இருளடைந்து உலகம் முழுதும் அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடந்தது. அசுரனின் மறைவின் பின் மனம் மகிழ்ந்த மக்களெல்லாம் தமது அகவிருள் மறைந்ததுபோல உலகமும் அஞ்ஞான இருளினின்றும் விடுபட்டு ஒளி பெறும் வண்ணம் இல்லங்களிலும் ஆலயங்களிலும் தீபங்கள் ஏற்றி ஒளியூட்டி கண்ணனைத் தொழுது வந்தனர். இப்புண்ணிய தினத்தில் ஸ்நானம், புத்தாடையணிதலும் செய்வது போல தீபங்கள் ஏற்றி வழிபடுவதும் மனதிற்கும், உலகத்திற்கும் (வீடுகள், கோவில்கள்) ஒளி பெறச்செய்வதே தீபாவளிப்பண்டிகையின் உட்பொருளும் பெயருக்கேற்ற சிறப்புமாகும்.

[4-ம் பக்கம் பார்க்க]

# விபவ வருஷ ஐப்பசி மாத கிரக நிரயனஸ்புடங்கள்

(இலங்கை நேரப்படி காலை 5-30 மணிக்கு Nirayana Longitudes of Planets for 5 30 A. M. C. S. T.)

ராகுஸ்புடத்துடன் 6 ராசி கூட்ட கேதுஸ்புடம் வரும் (அயனாம்சம் 23 பா 42கலை 04விகலை)

| தேதி ஆங் | தேதி ஐப் | நாக்ஷத்ர நேர பகல் 12-00 ம நி. செ | சூரியன் ☉ ரா பா க | சந்திரன் ☽ ரா பா க | செவ்வாய் ♂ ரா பா க | புதன் ☿ ரா பா க | குரு ♃ ரா பா க | சுக்கிரன் ♀ ரா பா க | சனி ♄ ரா பா க | ராகு ☊ ரா பா க | யுரேனஸ் ♅ ரா பா க | நெப்டி ♆ ரா பா க |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | 13 43 5 | 6 0 8 | 8 10 51 | 11 7 1 | 5 18 55 | 1 11 36 | 4 20 50 | 8 4 1 | 10 18 7 | 8 4 4 | 8 13 56 |
| 18 | 2 | 13 47 52 | 1 8 | 8 24 16 | 6 52 | 18 24 | 11 31 | 22 0 | 4 5 | 18 4 | 4 6 | 13 57 |
| 19 | 3 | 13 51 48 | 2 7 | 9 7 59 | 6 44 | 18 5 | 11 26 | 23 11 | 4 9 | 18 0 | 4 8 | 13 58 |
| 20 | 4 | 13 55 45 | 3 7 | 9 22 0 | 6 37 | 17 57 | 11 22 | 24 23 | 4 14 | 17 56 | 4 10 | 13 59 |
| 21 | 5 | 13 59 41 | 4 7 | 10 6 19 | 6 31 | 18 0 | 11 17 | 25 34 | 4 18 | 17 53 | 4 13 | 14 0 |
| 22 | 6 | 14 3 38 | 5 6 | 10 20 54 | 6 26 | 18 14 | 11 11 | 26 45 | 4 23 | 17 50 | 4 15 | 14 1 |
| 23 | 7 | 14 7 35 | 6 6 | 11 5 41 | 6 21 | 18 38 | 11 6 | 27 57 | 4 28 | 17 46 | 4 17 | 14 2 |
| 24 | 8 | 14 11 31 | 7 6 | 11 20 35 | 6 18 | 19 12 | 11 1 | 29 8 | 4 33 | 17 43 | 4 19 | 14 3 |
| 25 | 9 | 14 15 28 | 8 6 | 0 5 27 | 6 15 | 19 55 | 10 55 | 5 0 20 | 4 37 | 17 40 | 4 22 | 14 5 |
| 26 | 10 | 14 17 24 | 9 5 | 0 20 9 | 6 13 | 20 45 | 10 49 | 1 32 | 4 42 | 17 37 | 4 24 | 14 6 |
| 27 | 11 | 14 23 21 | 10 5 | 1 4 34 | 6 11 | 21 43 | 10 43 | 2 44 | 4 47 | 17 34 | 4 27 | 14 7 |
| 28 | 12 | 14 27 17 | 11 5 | 1 18 35 | 6 11 | 22 48 | 10 37 | 3 56 | 4 52 | 17 30 | 4 29 | 14 8 |
| 29 | 13 | 14 31 14 | 12 5 | 2 2 10 | 6 11 | 23 58 | 10 31 | 5 8 | 4 57 | 17 27 | 4 32 | 14 9 |
| 30 | 14 | 14 35 10 | 13 5 | 2 15 17 | 6 12 | 25 12 | 10 24 | 6 20 | 5 3 | 17 24 | 4 34 | 14 11 |
| 31 | 15 | 14 39 7 | 6 14 5 | 2 28 0 | 11 6 14 | 5 26 31 | 1 10 18 | 5 7 32 | 8 5 8 | 10 17 21 | 8 4 37 | 8 14 12 |
| நவ 1988 | | | | | | | | | | | | |
| 1 | 16 | 14 43 4 | 6 15 5 | 3 10 21 | 11 6 16 | 5 27 53 | 1 10 11 | 5 8 45 | 8 5 13 | 10 17 18 | 8 4 39 | 8 14 13 |
| 2 | 17 | 14 47 0 | 16 5 | 3 22 25 | 6 19 | 5 29 18 | 10 4 | 9 57 | 5 19 | 17 15 | 4 42 | 14 15 |
| 3 | 18 | 14 50 57 | 17 5 | 4 4 19 | 6 24 | 6 0 46 | 9 57 | 11 10 | 5 24 | 17 11 | 4 45 | 14 16 |
| 4 | 19 | 14 54 53 | 18 5 | 4 16 6 | 6 28 | 2 16 | 9 50 | 12 22 | 5 30 | 17 8 | 4 47 | 14 18 |
| 5 | 20 | 14 58 50 | 19 5 | 4 27 53 | 6 34 | 3 47 | 9 43 | 13 35 | 5 35 | 17 7 | 4 50 | 14 19 |
| 6 | 21 | 15 2 46 | 20 5 | 5 9 44 | 6 40 | 5 20 | 9 36 | 14 48 | 5 41 | 10 17 3 | 4 53 | 14 21 |
| 7 | 22 | 15 6 43 | 21 6 | 5 21 42 | 6 47 | 6 53 | 9 29 | 16 1 | 5 46 | 17 0 | 4 56 | 14 22 |
| 8 | 23 | 15 10 39 | 22 6 | 6 3 51 | 6 55 | 8 28 | 9 21 | 17 14 | 5 52 | 16 57 | 4 59 | 14 24 |
| 9 | 24 | 15 14 36 | 23 6 | 6 16 13 | 7 4 | 10 3 | 9 14 | 18 27 | 5 58 | 16 53 | 5 2 | 14 25 |
| 10 | 25 | 15 18 33 | 24 6 | 6 28 48 | 7 13 | 11 39 | 9 6 | 19 40 | 6 4 | 16 50 | 5 5 | 14 27 |
| 11 | 26 | 15 22 29 | 25 7 | 7 11 37 | 7 23 | 13 15 | 8 58 | 20 53 | 6 10 | 16 47 | 5 8 | 14 28 |
| 12 | 27 | 15 26 26 | 26 7 | 7 24 38 | 7 34 | 14 51 | 8 50 | 22 6 | 6 15 | 16 44 | 5 11 | 14 30 |
| 13 | 28 | 15 30 22 | 27 8 | 8 7 51 | 7 45 | 16 27 | 8 43 | 23 20 | 6 21 | 16 41 | 5 14 | 14 32 |
| 14 | 29 | 15 34 19 | 28 8 | 8 21 15 | 7 57 | 18 4 | 8 35 | 24 33 | 6 28 | 16 38 | 5 17 | 14 33 |
| 15 | 30 | 15 38 15 | 6 29 9 | 9 4 49 | 11 8 9 | 6 19 40 | 1 8 27 | 5 25 46 | 8 6 34 | 10 16 35 | 8 5 20 | 8 14 35 |

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீட்சை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விகடப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஐப்பசி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 02 நிமிஷம்)

| வாரம் | 6...02<br>7...02 | 7...02<br>8...02 | 8...02<br>9...02 | 9...02<br>10...02 | 10...02<br>11...02 | 11...02<br>12...02 | 12...02<br>1...02 | 1...02<br>2...02 | 2...02<br>3...02 | 3...02<br>4...02 | 4...02<br>5...02 | 5...02<br>6...02 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# நாள் சுபமா?

ஐப் 1 திங் (17-10-88) ஷஷ்டி காலை 8-01 வரை, மூலம்- சித்தம் காலை 9-59வரை, ஸரஸ்வதி பூஜாரம்பம், சுபகருமங்களை காலை 9-59க்கு முன் செய்க. ராகு 7-32—9-01

ஐப் 2 செவ் (18-10-88) ஸப்தமி- மரணம் காலை 7-09 வரை, அஷ்டமி பி.இ. 5-47 வரை, பூராடம்- சித்தம் காலை 9-44 வரை. அசுபதினம். ராகு 3-02—4-31

ஐப் 3 புத (19-10-88) நவமி பி.இ. 3-55 வரை, உத்தராடம் காலை 9-00 வரை, அமிர்தசித்தம், மஹாநவமி, ஸரஸ்வதிபூஜை. சுபதினமல்ல. ராகு 12-02—1-30

ஐப் 4 வியா (20-10-88) தசமி பி.இ. 1-35 வரை, திருவோணம் காலை 7-46 வரை, விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம். சுபகருமங்கட்கு நன்று. ராகு 1-32—3-00

ஐப் 5 வெ (21-10-88) ஏகாதசி இரவு 10-52 வரை அவிட்டம்- மரணம் காலை 6-06 வரை, சதயம் பி.இ. 4-02 வரை, ஸர்வஏகாதசிவிரதம். காலை 6மணியின்மேல் சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 10-32—12-00

ஐப் 6 சனி (22-10-88) துவாதசி மாலை 7-50வரை, பூரட்டாதி- மரணம் பி.இ. 1-42 வரை, அசுபதினம். ராகு 9-02—10-30

ஐப் 7 ஞா (23-10-88) திரயோதசி மாலை 4-36 வரை, உத்தரட்டாதி இரவு 11-12 வரை, அமிர்தம், பிரதோஷவிரதம். சுபகருமங்கட்கு நன்று. ராகு 4-32—6-00

ஐப் 8 திங் (24-10-88) சதுர்த்தசி பகல் 1-18வரை' ரேவதி இரவு 8-41 வரை, சித்தம், பூரணைவிரதம், காமேஸ்வரிபூஜை, அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-32—9-00

ஐப் 9 செவ் (25-10-88) பூரணை பகல் 10-06வரை, அசுவினி மாலை 6-19 வரை, அமிர்தசித்தம், வயற்கருமங்கள் செய்யலாம். ராகு 3-02—4-30

ஐப் 10 புத (26-10-88) பிரதமை காலை 7-10வரை, துவிதியை பி.இ. 4-39 வரை, பரணி மாலை 4-17 வரை. கார்த்திகைவிரதம், சுபதினமன்று. ராகு 12-03—1-31

ஐப் 11 வியா (27-10-88) திரிதியை பி.இ. 2-48 வரை, கார்த்திகை பகல் 2-43 வரை, மரணம், அசுபதினம். ராகு 1-33—3-01

ஐப் 12 வெ (28-10-88) சதுர்த்தி பி.இ. 1-29வரை, ரோகிணி- மரணம் பகல் 1-48 வரை, அசுபதினம். ராகு 10-33—12-01

ஐப் 13 சனி (29-10-88) பஞ்சமி பி.இ. 1-05வரை, மிருகசீரிடம் பகல் 1-39 வரை, சுபகருமங்கள் செய்யலாம். ராகு 9-03—10-31

ஐப் 14 ஞா (30-10-88) ஷஷ்டி பி.இ. 1-32 வரை, திருவாதிரை பகல் 2-19 வரை, சித்தம், அசுபதினம். ராகு 4-33—6-01

ஐப் 15 திங் (31-10-88) புனர்பூசம்- அமிர்தம் பகல் 3-48 வரை, ஸப்தமி- மரணம் பி.இ. 2-49வரை, சுபகருமங்களுக்கு உகந்ததினம். ராகு 7-33—9-01

ஐப் 16 செவ் (1-11-88) அஷ்டமி பி.இ. 4-46வரை, பூசம் மாலை 6-00 வரை, சித்தம். சுபகருமங்களை விலக்குக. ராகு 3-04—4-32

ஐப் 17 புதன் (2-11-88) நவமி முழுவதும், ஆயிலியம் இரவு 8-46 வரை, சித்தம், அசுபதினம். ராகு 12-04—1-32

ஐப் 18 வியா (3-11-88) நவமி காலை 7-14 வரை, மகம் இரவு 11-51 வரை, அமிர்தசித்தம். காலை 7-14 இன்மேல் நற்கருமங்கள் செய்யலாம். ராகு 1-34—3-02

ஐப் 19 வெ (4-11-88) தசமி காலை 9-56 வரை, பூரம் பி.இ. 3-02 வரை, சித்தம், அசுபதினம். ராகு 10-34—12-02

ஐப் 20 சனி (5-11-88) ஏகாதசி பகல் 12-38 வரை, உத்தரம் பி.இ. 6-03 வரை, மரணம் ஸர்வஏகாதசிவிரதம் அசுபதினம். ராகு 9-04—10-32

ஐப் 21 ஞா (6-11-88) துவாதசி பகல் 3-06 வரை, அத்தம் முழுவதும், அமிர்தசித்தம், பிரதோஷவிரதம். சுபகருமங்கட்கு நன்று. ராகு 4-34—6-02

ஐப் 22 திங் (7-11-88) திரயோதசி மாலை 5-10 வரை, அத்தம்- சித்தம் காலை 8-44 வரை, இரவு நரகசதுர்த்தசி ஸ்நானம். சுபகருமங்களுக்கு உகந்தது. ராகு 7-35—9-03

ஐப் 23 செவ் (8-11-88) சதுர்த்தசி மாலை 6-46 வரை, சித்திரை பகல் 11-00 வரை, சித்தம் தீபாவளி. அசுபதினம். ராகு 3-05—4-33

ஐப் 24 புதன் (9-11-88) அமாவாசை மாலை 7-51 வரை, சுவாதி பகல் 12-46 வரை, அமாவாசை விரதம், கேதாரகௌரிவ்ரதம்; சுபதினமன்று.
ராகு 12-05—1-33

ஐப் 25 வியா (10.11.88) பிரதமை இரவு 8-26 வரை, விசாகம் பகல் 2-02 வரை, சித்தம், ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம். சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 1-35—3-03

ஐப் 26 வெ (11-10-88) துவிதியை இரவு 8-33 வரை. அனுஷம் பகல் 2-52 வரை, மரணம், நற்கருமங்களுக்கு உகந்தது.
ராகு 10-36—12-04

ஐப் 27 சனி (12-10-88) திரிதியை இரவு 8-17 வரை. கேட்டை பகல் 3-18 வரை, சித்தம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 9-06—10-34

ஐப் 28 ஞா (13-10-88) சதுர்த்தி மாலை 7-40 வரை, மூலம் பகல் 3-22 வரை, அமிர்தசித்தம், சதுர்த்திவிரதம். அசுபதினம்.
ராகு 4-36—6-04

ஐப் 29 திங் (14-10-88) பஞ்சமி மாலை 6-43 வரை, பூராடம் பகல் 3-08 வரை, மரணம், சுபகருமங்களுக்கு உகந்தது. ராகு 7-37—9-05

ஐப் 30 செவ் (15-10-88) ஷஷ்டி மாலை 5-29 வரை, உத்தராடம்- மரணம் பகல் 2-36 வரை, ஸ்கந்தஷஷ்டி விரதம். அசுபதினம், ராகு 3-07—4-35

## "தீபங்கள் ஏற்றிடுவோம்"

தீபங்கள் ஏற்றிடுவோம் — ஒளி
வெள்ளம் பாய்ச்சிடுவோம்
தீபாவலி கொண்டாடுவோம் — தீமை
அகன்றிட வேண்டுவோம்

தீமைகள் ஒழிந்திடவே — நாட்டில்
நன்மைகள் ஒளிர்ந்திடவே
ஆணவம் அகன்றிடவே — மனத்
தூய்மை சிறந்திடவே

தீபங்கள் ஏற்றிடுவோம் — துன்ப
இருள் அகற்றிடுவோம்
பூசல்கள் ஒழித்திடுவோம் — ஒன்றி
நாளும் வாழ்ந்திடுவோம்

திருமாலை ஏத்திடுவோம் — அவன்
திருவருளை வேண்டிடுவோம்
புத்தாடை அணிந்திடுவோம் — புதுக்
கவிதைகள் புனைந்திடுவோம்

நாட்டினில் அமைதி நிலைத்திடவே — நமை
வாட்டிடும் கொடியோன் தொலைந்திடவே
வீட்டினில் விளக்கு ஏற்றிடுவோம் — ஒளி
வெள்ளம் எங்கும் பாய்ச்சிடுவோம்.

செ, சுதாகரன்- கல்வயல்

## ஸ்கந்தஷஷ்டி

மருவுமடியார்கள் மனதில் விளையாடும் மரகதமயூரப்பெருமானை வாயார வாழ்த்தி மனமாரத்துதித்து எம் வல்வினை போக்குவதற்குகந்த விரதம் கந்தஷஷ்டிவிரதமாகும். தேவர்கள் துயர் தீர சூரபத்மாசுரனை வேல் கொண்டு சம்ஹாரம் செய்த முருகப்பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் இவ்விரதம் ஐப்பசி மாசப் பூர்வபக்ஷப் பிரதமை முதல் சஷ்டியூறுகிய ஆறு தினங்களும் உபவாசமிருந்தோ அல்லது முதல் ஐந்து தினங்களும் ஒருபொழுது உணவருந்தி சஷ்டியில் உபவாசமிருந்தோ மறுநாள் சப்தமியன்று விரதபூர்த்தியாகிய பாரணை செய்தல் வேண்டும். இத்தினங்களில் முருகனாலயங்களில் அபிஷேக ஆராதனைகளும் சஷ்டியன்று சூரசம்ஹார உற்சவமும் மறுநாள் முருகனுக்கு திருக்கல்யாண வைபவமும் நடைபெறுவதுண்டு. நிவேதனமாக பழவகை, வள்ளிக்கிழங்கும் விசேடமாக தினைமாவில் மாவிளக்கு வைத்தலும் பக்தர்களின் செயற்பாடாகும். மாவிளக்கு என்பது தினைமாவுடன் நெய், தேன் சேர்த்து குழைத்து விளக்குப்போல தகழி அமைத்து அதில் திரியிட்டு நெய்யில் எரியச் செய்வதாகும். முருகப்பெருமான் முன் படைத்து விளக்கேற்றி நிவேதனம் செய்து அதைப்பிரசாதமாக உட்கொள்வதுமுண்டு. இது முருகனுக்கு மிகவும் பிரீதியான நிவேதனமாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

## மணப்பந்தல்

| | | | |
|---|---|---|---|
| செ | | | கே |
| | கிரகநிலை | | வி |
| புத | | | சந் |
| சூரி ராகு | சுக் | சனி | லக் |

ஜாதகம் இல: 70
ஆண்
நட்சத்திரம்: மகம்
பிறந்த திகதி:
11-1-1955 செவ்வாய்
நேரம்: இரவு 11-10

வேளாளர் குலத்தைச் சேர்ந்த கமவேலை செய்யக்கூடிய, வாகனங்கள் ஓட்டக் கூடிய, படித்த அழகுள்ள ஆண்மகனுக்கு அழகுள்ள, வேளாளர் குலத்தைச் சேர்ந்த, ரொக்கம், வயல் உட்பட ஓரளவு சீதனமும் உள்ள பெண் எதிர் பார்க்கப்படுகிறது.

தொடர்பு:- 'மணப்பந்தல்' சோதிடமலர்
மட்டுவில்—சாவகச்சேரி

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

விபவ ஹு ஐப்பசி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (17-10-88 முதல் 15-11-88 வரை)

| இங் அக் | தமி ஐப் | வாரம் | துலா ம.மி. முதல் (காலை) | துலா ம.மி. வரை | விருச்சி ம. மி. வரை (காலை) | தனுசு ம. மி. வரை (பகல்) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பி.ப) | மீனம் மி. ம. வரை (மாலை) | மேடம் ம. மி. வரை (இரவு) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (பி.இ) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | திங் | 6 2 | 8 5 | 10 16 | 12 24 | 2 19 | 4 4 | 5 47 | 7 36 | 9 39 | 11 50 | 1 58 | 3 58 | 5 57 |
| 18 | 2 | செவ் | 5 58 | 8 1 | 10 12 | 12 20 | 2 15 | 4 0 | 5 43 | 7 32 | 9 35 | 11 46 | 1 54 | 3 54 | 5 53 |
| 19 | 3 | புதன் | 5 54 | 7 57 | 10 8 | 12 16 | 2 11 | 3 56 | 5 39 | 7 28 | 9 31 | 11 42 | 1 50 | 3 50 | 5 49 |
| 20 | 4 | வியா | 5 50 | 7 53 | 10 2 | 12 12 | 2 7 | 3 52 | 5 35 | 7 24 | 9 27 | 11 38 | 1 46 | 3 46 | 5 45 |
| 21 | 5 | வெள் | 5 46 | 7 49 | 9 58 | 12 8 | 2 3 | 3 48 | 5 31 | 7 20 | 9 23 | 11 34 | 1 42 | 3 42 | 5 41 |
| 22 | 6 | சனி | 5 42 | 7 45 | 9 54 | 12 4 | 1 59 | 3 44 | 5 27 | 7 16 | 9 19 | 11 30 | 1 38 | 3 38 | 5 37 |
| 23 | 7 | ஞாயி | 5 38 | 7 41 | 9 50 | 12 0 | 1 54 | 3 40 | 5 23 | 7 12 | 9 15 | 11 26 | 1 34 | 3 34 | 5 33 |
| 24 | 8 | திங் | 5 34 | 7 37 | 9 46 | 11 56 | 1 50 | 3 36 | 5 19 | 7 8 | 9 11 | 11 22 | 1 30 | 3 30 | 5 29 |
| 25 | 9 | செவ் | 5 30 | 7 33 | 9 42 | 11 52 | 1 46 | 3 32 | 5 15 | 7 4 | 9 7 | 11 18 | 1 26 | 3 26 | 5 25 |
| 26 | 10 | புதன் | 5 26 | 7 29 | 9 38 | 11 48 | 1 42 | 3 28 | 5 11 | 7 0 | 9 3 | 11 14 | 1 22 | 3 22 | 5 21 |
| 27 | 11 | வியா | 5 22 | 7 24 | 9 33 | 11 43 | 1 37 | 3 23 | 5 6 | 6 55 | 8 55 | 11 9 | 1 17 | 3 17 | 5 16 |
| 28 | 12 | வெள் | 5 17 | 7 20 | 9 29 | 11 39 | 1 33 | 3 19 | 5 2 | 6 51 | 8 51 | 11 5 | 1 13 | 3 13 | 5 12 |
| 29 | 13 | சனி | 5 13 | 7 16 | 9 25 | 11 35 | 1 29 | 3 15 | 4 58 | 6 47 | 8 47 | 11 1 | 1 9 | 3 9 | 5 8 |
| 30 | 14 | ஞாயி | 5 9 | 7 12 | 9 21 | 11 31 | 1 25 | 3 11 | 4 54 | 6 43 | 8 43 | 10 57 | 1 5 | 3 5 | 5 4 |
| 31 | 15 | திங் | 5 5 | 7 9 | 9 18 | 11 28 | 1 21 | 3 8 | 4 51 | 6 40 | 8 40 | 10 54 | 1 2 | 3 2 | 5 1 |
| நவ 1 | 16 | செவ் | 5 2 | 7 5 | 9 14 | 11 24 | 1 17 | 3 4 | 4 47 | 6 36 | 8 36 | 10 50 | 12 58 | 2 58 | 4 57 |
| 2 | 17 | புதன் | 4 58 | 7 1 | 9 10 | 11 20 | 1 13 | 3 0 | 4 43 | 6 32 | 8 32 | 10 46 | 12 54 | 2 54 | 4 53 |
| 3 | 18 | வியா | 4 54 | 6 57 | 9 6 | 11 16 | 1 9 | 2 56 | 4 39 | 6 28 | 8 28 | 10 42 | 12 50 | 2 50 | 4 49 |
| 4 | 19 | வெள் | 4 50 | 6 53 | 9 2 | 11 12 | 1 5 | 2 52 | 4 35 | 6 24 | 8 24 | 10 38 | 12 46 | 2 46 | 4 45 |
| 5 | 20 | சனி | 4 46 | 6 49 | 8 58 | 11 8 | 1 1 | 2 48 | 4 31 | 6 20 | 8 20 | 10 34 | 12 42 | 2 42 | 4 41 |
| 6 | 21 | ஞாயி | 4 42 | 6 45 | 8 54 | 11 4 | 12 57 | 2 44 | 4 27 | 6 16 | 8 16 | 10 30 | 12 38 | 2 38 | 4 37 |
| 7 | 22 | திங் | 4 38 | 6 41 | 8 50 | 11 0 | 12 53 | 2 40 | 4 23 | 6 12 | 8 12 | 10 26 | 12 34 | 2 34 | 4 33 |
| 8 | 23 | செவ் | 4 34 | 6 37 | 8 46 | 10 56 | 12 49 | 2 36 | 4 19 | 6 8 | 8 8 | 10 22 | 12 30 | 2 30 | 4 29 |
| 9 | 24 | புதன் | 4 30 | 6 33 | 8 42 | 10 52 | 12 45 | 2 32 | 4 15 | 6 4 | 8 4 | 10 18 | 12 26 | 2 26 | 4 25 |
| 10 | 25 | வியா | 4 26 | 6 30 | 8 39 | 10 49 | 12 42 | 2 29 | 4 12 | 6 1 | 8 1 | 10 15 | 12 23 | 2 23 | 4 22 |
| 11 | 26 | வெள் | 4 23 | 6 26 | 8 35 | 10 45 | 12 38 | 2 25 | 4 8 | 5 57 | 7 57 | 10 11 | 12 19 | 2 19 | 4 18 |
| 12 | 27 | சனி | 4 14 | 6 22 | 8 31 | 10 41 | 12 34 | 2 21 | 4 4 | 5 53 | 7 53 | 10 7 | 12 15 | 2 15 | 4 14 |
| 13 | 28 | ஞாயி | 4 15 | 6 19 | 8 28 | 10 38 | 12 31 | 2 18 | 4 1 | 5 50 | 7 50 | 10 4 | 12 12 | 2 12 | 4 11 |
| 14 | 29 | திங் | 4 12 | 6 15 | 8 24 | 10 34 | 12 27 | 2 14 | 3 57 | 5 46 | 7 46 | 10 0 | 12 8 | 2 8 | 4 7 |
| 15 | 30 | செவ் | 4 8 | 6 11 | **8 20** | **10 30** | 12 23 | 2 10 | 3 53 | 5 42 | 7 42 | 9 58 | 12 4 | 2 4 | 4 3 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஐப். 30உ. (15-11-88) பகல் 9 மணிக்கு என்ன லக்கினம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-20—10-30) தனுசுலக்னம்

# ஜப்பசி மாதக் கிரகநிலை

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | செவ் | | குரு | | |
| கும்பம் | ராகு | ஜப்பசி மாதக் கிரக நிலை | | | கடகம் |
| மகரம் | | | | கேது சுக் | சிங்கம் |
| | சனி யுரே நெப்டி | | சூ | புத | |
| | தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

## கிரக மாற்றங்கள்

8உ (24-10-88) இரவு 10-49க்கு கன்-சுக்
17உ (2-11-88) மாலை 4-55க்கு துலா-புத
1உ புதன் உதயம்.
5உ புதன் வக்கிரத்தியாகம்.
13உ செவ்வாய் வக்கிராரம்பம்.

இம்மாதம் குரு வக்கிரத்தில் சஞ்சரிக்கின்றது.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜப் | 2உ | (18-10-88) | பகல் | 3-35 | முதல் | மகரம் |
| | 4உ | (20-10-88) | மாலை | 6-58 | ,, | கும்பம் |
| | 6உ | (22-10-88) | இரவு | 8-18 | ,, | மீனம் |
| | 8உ | (24-10-88) | இரவு | 8-41 | ,, | மேடம் |
| | 10உ | (26-10-88) | இரவு | 9-50 | ,, | இடபம் |
| | 12உ | (28-10-88) | பி.இ. | 1-37 | ,, | மிதுனம் |
| | 15உ | (31-10-88) | காலை | 9-21 | ,, | கடகம் |
| | 17உ | (2-11-88) | இரவு | 8-45 | ,, | சிங்கம் |
| | 20உ | (5-11-88) | காலை | 9-48 | ,, | கன்னி |
| | 22உ | (7-11-88) | இரவு | 9-55 | ,, | துலாம் |
| | 25உ | (10-11-88) | காலை | 7-46 | ,, | விருச்சிகம் |
| | 27உ | (12-11-88) | பகல் | 3-18 | ,, | தனுசு |
| | 29உ | (14-11-88) | இரவு | 9-01 | ,, | மகரம் |

### கிரகநிலை குறிக்க:-

* 6-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஐப்பசி மீ 30 உ பகல் 9-00 மணிக்கு தனுசு லக்னம் என அறிந்து கொண்ட பின் 'தனுசு' என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும்போது சிங்கலக்னம் உதயமாகிறது. இலக்கினாதிபதி 3ல் பகைபெற்றிருப்பதும் செவ்வாயின் 8-ம் பார்வையைப் பெறுவதும் அரசியல் நடைமுறைக்கு உகந்ததல்ல. அரசியல் தலைவர்களுக்கு கஷ்டங்கள் உண்டாம். லக்னத்தில் கேது இருப்பதும் நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும்.

# ஐப்பசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

17-10-88—15-11-88

சூரியன்: 16-10-88 பி.இ.2-04
துலாராசிப்பிரவேசம்
17-10-88 உதயம் காலை 6-02
17-10-88 உச்சம் பகல் 11-56
17-10-88 அஸ்தமனம் மாலை 5-50
31-10-88 உதயம் காலை 6-03
31-10-88 உச்சம் பகல் 11-54
31-10-88 அஸ்தமனம் மாலை 5-45

சந்திரன்: 25-10-88 பூரணை பகல் 10-06
9-11-88 அமாவாசை மாலை 7-51
11-11-88 சந்திரதரிசனம்.

## இரகங்கள்

புதன்:- கடந்த மாதம் வக்கிரகதியில் அஸ்தமனமடைந்த இக்கிரகம் 17-10-88-ல் கிழக்கில் உதயமாகி 21-10-88-ல் வக்கிரகதி நீங்கி நேர்கதியில் செல்லத் தொடங்கும். இது சூரியனிலிருந்து மிக வேகமாக விலகி 27-10-88-ல் சூரிய உதயத்தின் முன் 9 பாகை உயரத்தில் கிழக்கு வானத்தில் தோன்றும், பின் அதன் உயரம் படிப்படியாகக் குறைந்து 9-11-88-ல் சூரியனை அண்மிப்பதால் கிழக்குவானில் அஸ்தமனமாகிவிடும். இது 2-11-88-ல் துலாராசியில் பிரவேசிக்கிறது,

சுக்கிரன்:- மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் கிழக்குவானில் 39 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 33 பாகை உயரத்தில் காணப்படும். 24-10-88-ல் கன்னிராசியில் பிரவேசிக்கும்.

செவ்வாய்:- வக்கிரத்தில் சஞ்சரித்த இக்கிரகம் மாத ஆரம்பத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் கிழக்குவானில் 22 பாகை உயரத்தில் காணப்படும். 29-10-88-ல் வக்ரகதி நீங்கி நேர்கதியிற் செல்லும். மாதமுடிவில் சூரிய அஸ்தமனத்தின் பின் 51 பாகை உயரத்தில் கிழக்கில் காணப்படும்.

வியாழன்:- வக்கிரகதியில் சென்று கொண்டிருக்கும் இக்கிரகம் மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன் மேற்குவானில் 43 பாகை உயரத்தில் காணப்படும். மாதமுடிவில் மேற்குவானில் 10 பாகை உயரத்தில் காணப்படும். மாதம் முழுவதும் இடபராசியில் சஞ்சரிக்கிறது.

சனி:- மாதத் தொடக்கத்தில் சூரிய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 64 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாத முடிவில் 37 பாகை உயரத்தில் தோற்றும். இது தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

யுரேனஸ்:- தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது.

நெப்டியூன்:- தனுராசியிலேயே சஞ்சரிக்கிறது:

புளுட்டோ:- துலாராசியிற் சஞ்சரிக்கிறது.

## சமாகமங்கள்

23-10-88 காலை சந்திரனுக்கு தெற்கு 4½ பாகை. சூரிய உதயத்தின் முன் அவதானிக்கவும்.

27-10-88 பிற்பகல் சந்திரனுக்கு தெற்கு வியாழன் 6 பாகை. அன்று சூரிய உதயத்தின் முன் அவதானிக்கவும்.


1-11-88 நண்பகல் புதனுக்குத் தெற்கு சித்திரை நட்சத்திரம் 4 பாகை. சூரிய உதயம் முன் கிழக்குவானில் அவதானிக்கவும்.

3-11-88 காலை சந்திரனை ஒட்டி தெற்குப் புறமாக மகநட்சத்திரம் இதை அன்று சூரியோதயத்தின் முன் அவதானிக்கவும்:

6-11-88 மாலை சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 4½ பாகை. உதயம் முன் பார்க்கவும்.

11-11-88 நண்பகல் சந்திரனால் கேட்டை நட்சத்திரம் மறைக்கப்படும். சந்திர தரிசனத்துடன் அவதானிக்கவும்.

12-11-88 நள்ளிரவு சந்திரனுக்கு வடக்கு சனி 5½ பாகை. சந்திர அஸ்தமனத்தின் முன் அவதானிக்கவும்,




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
## 17-10-88 முதல் 16-11-88 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் ஜல மூர்த்தியாக வலம்வருகின்றார். சூரியன் மூர்த்தி பலம் பெறுவது நன்மையாகும். இவர்களின் உடல்நலம் குடும்ப நலம் என்பன குறிப்பிடக்கூடிய முன்னேற்றமடையும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் குடும்ப வருமானத்திலும் முன்னேற்றம் ஏற்படும். வீட்டில் அல்லது குடும்பத்தில் மங்களகிரமான கொண்டாட்டங்கள் நிகழும் சந்தர்ப்பங்களும் ஏற்படும். எனினும் செவ்வாயின் கோசாரசஞ்சாரம் சாதகமாக அமையாமையால் ஆயுதபயம்- விபத்து முதலானவையும் சிலருக்கு ஏற்படக்கூடும். உறவினர்களின் உதவிகள் கிடைக்கும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தானத்தில் குரு பகவான் இருப்பது நன்மையாகும். குடும்ப வருமானமும் கூடும். பெரியவர்கள், புத்திரர் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு இந்தமாதமும் வியாபார முன்னேற்றம் தொடரும். நிதி வசதிகளும் கிட்டும். பழைய நிலுவைக் கடன்களும் கைக்கு வந்து சேரும். முதலீடுகள் செய்ய ஏற்றகாலம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். பதவி உயர்ச்சி முதலியன பேச்சளவிலேயே தொடரும். உடன் உத்தியோகத்தர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி மனநிறைவு தரும். விளைச்சலும் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் அதிகரிக்கும். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.


தொழிலாளர்களுக்குக் கணிசமான அளவு வேலைவசதிகள் கிடைக்கும். தினச்சம்பளம் பெறும் தொழிலாளர்கள் சீவனத்துக்கு போதிய வருமானம் பெறுவர்.

மாணவர் கல்வியில் சிறப்புச்சித்திகள்- புலமைப்பரிசில்கள் கூடச்சிலருக்குக் கிடைக்கும். கணிதத்துறை- சட்டத்துறை- வர்த்தகத்துறை மாணவர்களுக்கு சிறப்புச் சித்தி பெற ஏற்றகாலம்.

பெண்களுக்கு குடும்பத்தானத்தில் குருபகவான் இருப்பதால் குடும்பப்பெரியவர்கள்- உறவினர்கள்- நண்பர்கள் மூலம் காரியங்களை வெற்றியுடன் சாதித்துக் கொள்ளுவார்கள். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகளும் கைகூடும்.

அதிஷ்டநாட்கள்:- அக்17,21,22பக,25,26,29,30
நவ3,4,12மாலை,12,14

துரதிஷ்டநாட்கள்,-அக்22இர,23,24மாலை
நவ5பக,6,7,11,12பக.




கார்த்திகை2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசிக்காரருக்கு இம்மாதம் சூரியன் 6ல் லோகமூர்த்தியாகிப் பவனி வருகிறார். சூரியன் தானபெலம் பெற்றாலும் மூர்த்திபலம் இல்லாமையால் நன்மை தீமை கலந்த பலன்களே இந்த மாதமும் நிகழும், பெரும்பாலும் இவர்களின் உடல்நலம் அடிக்கடி பாதிப்படையும். பொருள் வருமானத்திலும் எதிர்பார்ப்புக்களிலும் குறைவு காணப்படும். எந்த முயற்சிகளிலும் தடை- தாமதங்கள் அலைச்சல்- வீண்செலவுகள்- இழுபறிநிலை முதலானவை ஏற்படவே செய்யும். தெய்வ பக்தியுடன் நவக்கிரக பிரீதிசெய்து வருவதால் எதனையும் வெற்றிகரமாகச் சமாளித்து விடுவர்.

குடும்பத்தில் சிறுசிறுசச்சரவுகள்— பிணிபீடைகள் இடைக்கிடை தோன்றி மறையும். எனினும் கணவன் மனைவி உறவுகள் சீராகவே இருக்கும். குடும்ப வருமானம் திருப்திகரமாக இருப்பினும் குடும்பத்தில் ஏற்படும் திடீர்செலவுகளுக்குப் போதாமலும் போகலாம்.

வர்த்தகர்களுக்கு கடந்த மாதத்திலும்பார்க்க இந்த மாதம் சற்று வியாபாரம் முன்னேறத் தொடங்கும். பழைய முதலீடுகளில் வருமானம் ஓரளவு கிடைக்கும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு ஏறிக் கொண்டே போகும். மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் கூட அவ்வப்போது ஏற்படும். பதவி உயர்ச்சி முதலியன கிடைப்பதும் ஆச்சரியமே.

விவசாயிகளுக்குப் பயிரழிவு மனக்கவலைதரும். உற்பத்திச் செலவும் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டமே ஏற்படும். விளைச்சலும் குறையும்.

தொழிலாளருக்கு வேலையில்லாப் பிரச்சனை தொடரும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் நட்டம் ஏற்படக்கூடும். தொழிலாளர் மத்தியில் பிணக்குகளும் வலுவடையும்.

மாணவர் கல்வியில் தடைகள் ஏற்பட்டாலும் சுயமுயற்சியால் முன்னேற்றம் பெறும் வாய்ப்புக்கள் ஏற்படும். பொதுவாகப் பரீட்சை முடிவுகள் திருப்திதருவதும் சந்தேகமே.

பெண்களுக்குப் பொறுமைக்குச் சோதனையான மாதமாக இந்த மாதம் அமையும். விவாக முயற்சிகள் ஏமாற்றத்திலும் தோல்வியிலும் முடிவடையக்கூடும். குடும்பத்தில் வீண்செலவுகள் தொல்லைதரும்,

அதிஷ்டநாட்கள்;- அக்.19,20பக,23,27,28
நவ.1,2பக,6,7,15

துரதிஷ்டநாட்கள்:-அக்.17,18பக,25,26
நவ.8,9,10கா,13,14.




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம், 1,2,3,

மிதுன இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் 5ல் தாம்ரமூர்த்தியாகிப் பலம் குறைவது பெரும்பாலும் நன்மைதராது. இவர்களின் உடல்நலம்-குடும்பநலம் என்பவை அடிக்கடி பாதிப்படையவே செய்யும். பொருள் வருமானமும் குறையும். எத்துறையிலும் அலைச்சலும் ஏமாற்றங்களும் அநாவசியச் செலவுகளும் ஏற்படலாம். செவ்வாய்-சனிபகவான் திக்கு விரியபலம் பெறுவதால் அந்நியர் உதவி - அந்நிய தேசப் பொருள்வரவு சிலருக்கு ஏற்படக்கூடும். எவ்வாறாயினும் இனசனப் பகைவிரோதம் - புத்திரர் வழிக் கவலை முதலியனவும் ஏற்படவே செய்யும். தெய்வ வழிபாடும் நவக்கிரகப் பிரீதியும் செய்து வருவதால் சாந்தியடையமுடியும்.

குடும்பசுகவீனங்களால் அடிக்கடி மேலதிக செலவுகள் ஏற்படும். குடும்பவருமானம் குன்றும். கணவன்-மனைவி சச்சரவுகளும் இடைக்கிடை ஏற்படும். வீட்டில் அமைதி காணப்படும்.

• வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபார முன்னேற்றம் தொடரும். வங்கி-நிதி இருப்புகளும் திருப்தி தரும். கறுப்பு மார்க்கெட் வியாபாரிகள் பெருநட்டம் அடைவர்.

உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகம் 'இருதலைக் கொள்ளி எறும்புபோல்' திண்டாடச் செய்யும். அதிகாரிகளின் கெடுபிடிகள் ஒருபுறமும் வேலைப்பழு மறுபுறமுமாக மனக்குழப்பமடைவர்.

விவசாயிகளுக்கு விளைச்சல் குறையும். உற்பத்திச் செலவுகள் கூடும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் குறையும். எவ்வாறுயினும் கடன்பயம் ஏற்படும்.

தொழிலாளர் மத்தியில் குழப்பங்களும் போராட்டங்களும் ஏற்படுதலால் தொழில் வாய்ப்புகள் குறைவுறும். நாளுக்குநாள் தொழில் பிணக்குகளும் வளர்ந்துகொண்டு போகும்.

மாணவர் கல்வியில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்கள் ஏற்படுவது கடினம். கல்விக் கூடங்களில் சிலசமயம் கதவடைப்புக்களும் ஏற்படக் கூடும். முயற்சியுடையவர்கள் சித்தியடைவர்.

பெண்களுக்கு பிரச்சனைகள் அவ்வப்போது ஏற்படும். விவாக முயற்சிகள் பெரும்பாலும் இழுபறியில் இருக்கும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஒத்துழைப்பு கிடைப்பது கடினம்.

அதிஷ்டநாட்கள்: அக். 21,22பக.25,26,29,30
நவ. 3,4,8,9

துரதிஷ்டநாட்கள்; அக். 19,20பக.27,28
நவ. 10பக.11,12பக.15



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசிக்காரருக்கு இந்தமாதம் சூரியபகவான் 4ல் சுவர்ணமூர்த்தியாகி வலம் வருவது நன்மையாகும். கடந்த காலங்களிலும் இந்த மாதம் இவர்களுக்கு மனதுக்கு இனிய சம்பவங்கள் நிகழும். தேகசுகம் குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். எதிர்பார்த்த பொருள் வருமானங்களும் கிடைக்கும். நண்பர்கள்-உறவினர்கள் முதலியவர்களின் உதவி ஒத்தாசைகளும் கிடைக்கும். இராசாங்க உதவிகள்கூடக் கிடைக்கும். முன்பு தடைப்பட்டிருந்த காரியங்களில் வெற்றியும் பெறுவர். வீட்டில் மனநிறைவான கொண்டாட்டங்கள் நிகழச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். எனினும் மறைமுகச் சத்துரு தொல்லைகளும் இவர்களுக்கு இருக்கும்.

குடும்பத்தில் மனஅமைதி நிறைவுதரும். கணவன்-மனைவி உறவு முன்னேற்றமடையும். பெரியவர்கள்-புத்திரர்கள் - உறவினர்கள் உதவிகளும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். முதலீடுகளிலும் லாபம் கிடைக்கும். மொத்த வியாபாரிகள் - ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிச்சிறப்பு பதவியுயர்ச்சி முதலியன கிடைக்கச் சாதகமான காலம். உத்தியோகத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படும்.

விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல்கூடும் நல்ல சந்தைவாய்ப்பும் கிடைக்கும். வாழ்க்கைத் தரமும் உயரும்.

தொழிலாளர்களுள் ஒத்துழைப்பும் வேலை வசதிகளும் நாளாந்த சீவனத்துக்குப் போதிய வருமானமும் கிடைக்கும். ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி ஊக்கம் வளரும். கணித-விஞ்ஞானத்துறை-கலைத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்தி புலமைப் பரிசில்கள்கூடப் பெறுவர். ஆசிரியர் - மாணவர் ஒத்துழைப்பு கல்வித் தேர்ச்சிக்கு உதவும்.

பெண்களுக்கு இந்தமாதமும் மனநிறைவான தாய் அமையும். விவாகாதி முயற்சிகளில் வெற்றி பெறுவர். குடும்பப் பெண்கள் மனநிறைவும் பெறுவர். வீட்டில் சந்தோசகொண்டாட்டங்கள் நிகழும்.

அதிஷ்டநாட்கள்; அக். 23,27,28,31பகல்
நவ. 1,2பக.6,7,10பக.11

துரதிஷ்டநாட்கள்; அக். 17,18பக.21,22பக.29,30
நவ. 12மாலை13,14



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 3ல் ரஜஸமூர்த்தியாக வலம் வரு வது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்குக் கடந்த காலங்களிலும் பார்க்க இந்த மாதத்தில் சிறப்பான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். தொழில் சிறப்பும் ஏற்படும். பொருள் வருமானம் கூடும். ஆனால் பிரதான கிரகங்களான செவ்வாய் - குரு சனி இவர்களின் துர்க்கோசாரசஞ்சாரம் நிகழு வதால் காரியத்தடை, தாமதம், பொருள் நட்டம், விபத்து, அலைச்சல் முதலான கெட்ட பலன்களும் கலந்து நிகழ்ந்தாலும் ஆச் சரியமில்லை.

குடும்பத்தவர்களுக்கு அவ்வப்போது சிறுசிறு பிணக்குகள் ஏற்பட்டாலும் குடும்பத்தில் பெரும் பாலும் மனநிறைவும் அமைதியும் ஏற்படும். குடும்ப வருமானம் திருப்தி தரும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு முன் னேறத் தொடங்கும். மாதக் கடைசியில் வியா பாரம் சுறுசுறுப்படையும். கடன் நிலுவைகளை குறைப்பது நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் சாதுரியமாகச் சமாளித்துக் கொள்ளுவார்கள்.

விவசாயிகளுக்குப் பயிரழிவு தொடரும். விவ சாயப் பண்ணைகளிலும் விளைச்சல் வீழ்ச்சியுறும். சந்தைவாய்ப்பும் கிடையாது. இவர்களின் வாழ்க் கைத்தரமும் குறையும்.

தொழிலாளர்கட்கு வேலைவசதிகள் கிடைப் பதும் அரிதே. தொழில் ஒப்பந்த வேலைகளும் நட்டம் தரும். தொழில் சம்பந்தமான விபத்துக் களையும் சிலர் எதிர்கொள்ளவேண்டியும் இருக்கும்.

மாணவர் கல்வி வளர்ச்சியுறத் தொடங்கும். சுயமுயற்சியால் பரீட்சைகளிலும் சித்தியடைவர். கலைத்துறை-கணிதத்துறை மாணவர்கள் சிறப்புச் சித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு இந்த மாதத்திலும் மனக்கு ழப்பங்கள் தொடரும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் இழுபறியில் இருக்கும். வேலைக்குப்போகும் பெண்களுக்கு மேலதிகாரிக ளின் உதவிகள் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: அக். 17,25,26,29,30
நவ. 3,4,8,9,13,14

துரதிஷ்டநாட்கள்: அக். 19,20பக.23,31பகல்
நவ. 1,2பக.15



## கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2 கால்

கன்னியாராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 2ல் லோகமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் பலம் குன்றினாலும் குருபகவான் திரிகோணத்தில் இருந்து இந்தராசி யைத் திருஷ்டி செய்வதால் எது ஏற்படினும் சமாளித்துக் கொள்ளுவார்கள். பொதுவாக இவர் களின் உடல்நலம் இடைக்கிடை பாதிப்படை யும். பொருள் வருமானம் குறைந்தாலும் புத்தி ரர்-உறவினர்களின் உதவிகளும் கிடைக்கும். காரி யத்தடைகள் ஏற்படினும் அலைச்சல் மூலம் சிலர் காரிய சித்தியும் பெறுவர். எனினும் வீட்டில் விவாகாதி மங்கள கருமங்கள் கூட நிகழும் சந் தர்ப்பங்களும் ஏற்படும். வாகன விபத்துக்கள் பிரயாணங்களில் தொல்லைகள்கூடச் சிலருக்கு ஏற்படக்கூடும்.

குடும்பத்தில் சச்சரவுகளும் பிணி-பீடைகளும் இடைக்கிடை தோன்றிமறையும். குடும்ப வரு மானமும் குறையும். குடும்பத்தில் வீண் செலவு களும் ஏற்படக்கூடும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் கூடும். கடன் நிலுவைகளை அறவிடுவதில் சிரமங் கள் ஏற்படும். நிதி இருப்புகள் குறைவுறும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வேலைப்பளுவும் கூடும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் ஆறு தல் தரும்.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் கூடி னாலும் நல்லவிளைச்சல் லாபம்தரும். விவசாயப்

பண்ணைகளிலும் விளைச்சல் கூடும். விளைவு தானியம் முதலியவற்றிற்கு சந்தைவாய்ப்பு கிடைக்கும்.

தொழிலாளரின் நாளாந்த வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். வேலைவசதிகளும் கூடும். ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் தொடரும். கணிதத்துறை-கலைத்துறை மாணவர் சிறப்புச் சித்திகள் புலமைப் பரிசில்கள் கூடப் பெறுவர்.

பெண்களுக்கு இந்த மாதமும் மனக்குறைகளே அதிகரிக்கும் எனினும் கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகள் சிரமங்களுக்கிடையில் வெற்றி பெறும். குடும்பப் பெண்களுக்கு பொறுமையும் நாவடக்கமும் நன்மைதரும்.

அதிஷ்டநாட்கள்:- அக்.19,27,31பக
நவ.1,2,6,7,10பக,11,12,15

துரதிஷ்டநாட்கள்.- அஅ.21,22பக,25,26
நவ.2இர,3,4




சித்திரை 3,4 சுவாதி விசாகம் 1,2,3

இந்த இராசிக்காரருக்கு இந்தமாதம் சூரிய பகவான் சென்மத்தில் (1ல்) தாம்ரமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வதால் நல்ல பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. இவர்களின் உடல்நலம் இடைக்கிடை பாதிப்புறும், எதிர்பார்த்தவாறு பொருள் வருமானமும் கிடைப்பதும் அரிது. எடுத்த முயற்சிகளில் அலைச்சல்- வீண்விரையம்- பகை விரோதங்கள் முதலான கஷ்டங்களும் ஏற்படும். சனி பகவான்- செவ்வாய் இவர்களின் சுபகோசாரசஞ்சாரம் நிகழுதலின் அந்நியர்உதவி, அந்நிய தேசப் பொருள் வரவு, பிறநாட்டுப் பிரயாணம் முதலானவையும் கிடைக்கும்.

குடும்பத்தில் ஓரளவு சந்தோஷமும் அமைதியும் நிலவும். எனினும் குடும்பசுகம் குன்றும். இனசனபந்துக்களுடன் பகை விரோதங்கள் உண்டாகும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படும். நிதிவசதிகள் குறைவுறும். முதலீடுகளில் வருமானம் குன்றும்; புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கண்டிப்புக்கள் தொல்லைதரும். சிலருக்குப் பதவி மாற்றம் அல்லது பதவி இறக்கம் முதலானவை கூட இடம்பெறக்கூடும்.

விவசாயிகளுக்குச் சனிபலம் பெறுவது நன்மையாகும். விளைச்சல் அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளிலும் விளைச்சல் லாபம் தரும். சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படவும்கூடும்.

தொழிலாளர்களுக்கு வேலைவசதிகள் கிடைக்கும். இவர்களின் நாளாந்த சீவியத்துக்குப்போதிய வருமானம் கிடைக்கும். தொழில் ஒப்பந்த வேலைகளிலும் லாபம் பெறுவர்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தொடரும். பொறியியல்- மருந்து- இரசாயனத்துறை மாணவர்களின் கல்வி ஊக்கம் கூடும். வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள்- கல்வி வாய்ப்புக்கள் கூடச் சிலருக்குக் கிடைக்கும்.

பெண்களுக்குப் பலப்பல பிரச்சனைகள் ஏற்படும். பெரும்பாலும் இவர்கள் மன அமைதி பெறுவதும் கடினம். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகளிலும் இழுபறிநிலை தொடரும்.

அதிஷ்டநாட்கள்:- அக்.17,18பக,21,29,30
நவ.3,4,8,9,13,14

துரதிஷ்டநாட்கள்:-அக்.22இர,23,27,28
நவ 5பக,6,7




விசாகம் 4ம் கால் அனுஷம், கேட்டை

விருச்சிக இராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 12ல் (விரையத்தில்) ரஜஸமூர்த்தியாக வலம்வருவதால் நன்மை தீமை கலந்த பலன்களே நிகழும். இந்த இராசியைக் குருபகவான் சுபதிருஷ்டி செய்வது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். குடும்பநலமும் சீராக இருக்கும். இவர்களின் பொருள் வருமானம் கணிசமான அளவில் கூடும். எனினும் ஏழரைச் சனீஸ்வரனின் கோசாரசஞ்சாரம் நிகழுதலின் அலைச்சல், மனக்கஷ்டம், குடும்பத்தொல்லைகள், காரியத்தடைகள், பகை

விரோதங்கள் போன்றவையும் இடைக்கிடை ஏற்படக்கூடும். வீட்டில் சந்தோஷ கொண்டாட்டங்கள் கூடநிகழும் சாத்தியங்களும் ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பத்தில் மனக்கசப்பான சம்பவங்கள் இடைக்கிடை நிகழும். சிறுசிறுபிணக்குகளால் கணவன் மனைவியருக்கிடையில் வாக்குவாதங்கள் கூட ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். ஆனால் நிதி இருப்புக்கள் திருப்திதரும். முதலீடுகளின் லாபம் குறைவுறும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் பாராட்டுக்களும் கிடைக்கும். ஆனால் உத்தியோக சம்பந்தமான செலவினங்களும்கூடும். சகஉத்தியோகத்தர்களின் உதவிகள் கிடைக்கும்.


விவசாயிகளுக்கு இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர் அழிவுகள் ஏற்படும். விளைச்சலும் குறையும். விவசாயப் பண்ணைகளிலும் நட்டம் கூடும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் குறையும். கிடைக்கும் வேலைகளுக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதும் கஷ்டம். தொழில் பிணக்குகள் மன உளைச்சல் தரும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். கல்வி முன்னேற்றம் பெரும்பாலும் தடைப்படும். எனினும் சுயமுயற்சியுடையவர்கள் பரீட்சைகளில் சித்தியடைவார்கள்.

பெண்கள் மனதுக்கு இசைவான சம்பவங்கள் இந்த மாதத்திலும் தொடரும். விவாகாதி முயற்சிகளிலும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவர். கணவன்மாருடன் கருத்து மோதலைத் தவிர்ப்பதால் காரிய சித்தியும் மகிழ்ச்சியும் பெறுவர்.

அதிஷ்டநாட்கள்.- அக்.19,20பக,23,31பக
நவ.1,2பக,6,7,11,15
துரதிஷ்டநாட்கள்:-அக்.24இர,25,26,29,30
நவ.8,9,10காலை




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு இராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 11ல் (லாபத்தில்) சுவர்ணமூர்த்தியாகப் பலம் பெற்று வலம்வருவது சிறப்பாகும். இராசி அதிபன் குருரோகத்தானத்தில் இருந்து துரிக் கோசாரசஞ்சாரம் செய்வதும் ஏழரைச் சனீஸ்வரனின் கோசாரசஞ்சாரம் நிகழுவதும் நன்மை தராது. பொதுவாக இவர்களுக்கு இந்த மாதம் நன்மை கலந்த தீயபலன்கள் நிகழும். தேகசுகம் சீராக இருக்கும். பொருள் வருமானமும் திருப்தி தரும். எடுத்த முயற்சிகளில் காரியசித்தியும் பெறுவர். வீட்டில் அல்லது குடும்பத்திலுள்ளவர்களின் பிணிபீடைகளால் செலவுகள் கூடும். குடும்பத்தில் திடீர்நெருக்கடிகள் கூட ஏற்படும். எதிலும் அலைச்சல், ஏமாற்றம் முதலான சம்பவங்கள் கூடச் சிலருக்கு ஏற்படலாம்.

குடும்பத்தில் பிணிபீடைகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடும். புத்திரர்களால் கவலைகள் ஏற்படும். கடன் பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் தொடரும். நிதி இருப்பு வசதிகள் அதிகரிக்கும். பழைய முதலீடுகளில் லாபம் கிடைக்கும். புது முதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் மதிப்பும் பாராட்டுக்களும் கிடைக்கும். பதவிச் சிறப்புக்களும் கிடைக்கும். சகஉத்தியோகத்தர்களுடன் போட்டி பூசல்களும் ஏற்படக்கூடும்.

விவசாயிகளுக்கு இந்த மாதமும் பயிரழிவு தொடரும். கூடியவரை பெரிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. விவசாயப் பண்ணைகளிலும் வருமானம் வீழ்ச்சியுறும்.

தொழிலாளர் மத்தியில் வேலையில்லாப் பிரச்சனை விசுவரூபம் எடுக்கும். தொழில் பிணக்குகளால் இவர்களுக்கிடையில் சச்சரவுகள் கூட ஏற்படக்கூடும். தொழில் சம்பந்தமான விபத்துக்கள் கூட ஏற்படும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். மாணவர் மத்தியில் ஏமாற்றம், மறதி, அசிரத்தை முதலானவை தோன்றுவதால் கல்வி ஊக்கம் குன்றும். எனினும் சுயமுயர்சியுடையவர்கள் கல்வித் தேர்ச்சி பெறுவர்.

பெண்களுக்கு இந்த மாதம் மனதுக்குச் சாதகமாக அமைவது கடினம். கன்னிப் பெண்கள் காதல் விவகாரங்களில் ஏமாற்றப்பட வேண்டியும் நேரும். குடும்பப் பெண்களுக்குப் பொறுமையும் நாவடக்கமும் தேவையான மாதம்.

அதிஷ்டநாட்கள்:- அக்.17,21,25,26
நவ.3,4,8,9,13,14
துரதிஷ்டநாட்கள்:- அக்.27,28,31பக
நவ.1,2பக,10பக,11




உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2

இந்த இராசிக்காரருக்கு இந்த மாதம் சூரிய பகவான் 10ல் லோகமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் தானபெலம் பெற்றாலும் மூர்த்தி பலம் பெறுமையால் நன்மை, தீமை கலந்த பலன்களே அதிகம் நிகழும். இராசியைக் குருபகவான் சுபதிருஷ்டி செய்வதும் நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராக இருக்கும். போதியவரை பொருள் வருமானமும் கிடைக்கும். சிரமங்களுக்கு மத்தியில் அலேச்சல் மூலம் காரிய வெற்றியும் பெறுவர். வீட்டில் அல்லது நெருங்கிய இனபந்துக்களுக்குள் மங்கள கொண்டாட்டங்களும் நிகழச் சாதகமான காலம். மேலதிக வீண்செலவுகள், கடன்பயம், திடீர்நெருக்கடிகள் முதலியனவும் சிலருக்கு நிகழும்.

குடும்பத்தில் பிணி, பீடைகள் தோன்றி மறையும். பெரியவர்கள், புத்திரர், உறவினர்களின் உதவி கிடைக்கும். சிலருக்குப் புண்ணிய தீர்த்தப் பிரயாணங்கள் கூடக் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்குப் புதன் பலம் பெறுவதால் வியாபார முன்னேற்றம் உண்டாகும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் அதிக லாபம் பெறுவர். புதுமுதலீடுகளும் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்கு எவ்வளவுதான் மனப்பூர்வமாக வேலே செய்தாலும் மேலதிகாரிகள் புதிய குறைபாடுகளைக் காட்டி இவர்களை மட்டம் தட்டமுயல்வார்கள். சகஊழியர்களின் உதவிகள் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிரழிவு தொடர்ந்தாலும் ஓரளவு விளைச்சல் கூடும். நல்ல சந்தை வாய்ப்புக் கிடைப்பதால் நட்டமடைய மாட்டார்கள். கடன் சுமை குறையத் தொடங்கும்.

தொழிலாளர் ஓரளவு வேலே வசதிகள் பெறுவர். இவர்கள் மத்தியில் பிணக்குகள் குறையும். எவ்வாறாயினும் வேலைக்கேற்ற சம்பளம் பெறுவதும் கடினம்.

மாணவர் கல்வித் தேர்ச்சி வளர்ச்சியுறும். இவர்களின் முயற்சிக்கேற்பச் சிறப்புச் சித்திகளும் பெறுவர்; புலமைப்பரிசில்கள், வெளிநாட்டுக் கல்வி வாய்ப்பும் கிடைக்கலாம்.

பெண்கள் மனம் போல் வாழ்வு பெறச் சாதகமான மாதம். ஏழரைச் சனீஸ்வரனின் காலம் தொடர்ந்தாலும் விவாகாதி முயற்சிகள் வெற்றியடையலாம். வேலைக்குப் போகும் பெண்களுக்கு முன் எச்சரிக்கை தேவை.

அதிஷ்டநாட்கள்:- அக். 19, 20பக, 23, 27, 28
நவ. 5பக, 6, 7, 11, 15

துரதிஷ்டநாட்கள்:- அக். 17, 18பக, 29, 30
நவ. 2இரவு, 3, 4, 13, 14




அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசிக்காரருக்கு இந்த மாதம் சூரியபகவான் 9ல் சுவர்ணமூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் தானபலம் குறைந்தாலும் மூர்த்திபலம் சிறப்பாக அமைவது நன்மையாகும். இராசி அதிபன் லாபத்தில் இருந்து சுப திருஷ்டி செய்வதும் நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல் நலம் சீராக இருக்கும். கடந்த காலங்களிலும் பார்க்க இந்தமாதம் பொருள் வருமானத்தில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் ஏற்படும். இராசாங்க உதவிகள், இனசன பந்துக்கள் கொண்டாட்டம், காரிய சித்திகள், அந்நியர் உதவிகள் முதலானவை நிகழும். செவ்வாய்-குரு இவர்களின் துர்க்கோசாரசஞ்சாரம் நிகழுதலின் ஆயுத பயம், விபத்து, அவமிருத்துப் பயம், பொருள் நட்டம் முதலான பலன்களும் சிலருக்குக் கலந்து நிகழும்.

குடும்பத்தானத்தில் செவ்வாய் இருக்க மனைவி மக்கள் பிணிபீடைகள் இடைக்கிடை ஏற்படச் செய்யும், பொருள் வருமானம் வீடு-வாகன சிறப்புகள் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் வருமானம் வீழ்ச்சியுறும். நிதிக்கையிருப்பும் குறைவுறும். வாடிக்கையாளர் வரவும் குறைவுறும். கடன் நிலுவைகளை அறவிடுவதிலும் சிரமங்கள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் பலம்பெறுவதால் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்

கும். வேலைப்பொறுப்புக்கள் கூடும். சக உத்தி யோகத்தர்களின் உதவிகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் மனநிறை வைத் தரும். விவசாயப் பண்ணைகளிலும் லாபம் கிட்டும். பொருட்களுக்கு நல்ல சந்தைவாய்ப்புக் கிட்டும். இவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

தொழிலாளர் வேலைவசதிகள் பெறுவர். எண்ணெய்வகை-இரசாயனம்-இரும்பு- ஆயுதத் தொழிலாளருக்குச் சிறப்பு வருமானம் கிடைக் கும். ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் கிடைக் கும்.

மாணவர் கல்வி முன்னேற்றம் தடைகள் தாண்டுவதன்பேரில் உண்டாகும். இயந்திர-இர சாயனத் தொழில்துறை மாணவர் சிறப்புச் சித்தி களும் பெறுவர். புலமைப் பரிசில்கள் வெளி நாட்டு நிறுவனங்களில் கல்வி வாய்ப்பும் சிலர் பெறச் சாதகமானகாலம்.

பெண்களுக்கு ஏதோ ஒருவகையில் மனக் குறைகள் இந்த மாதத்தில் ஏற்பட்டுக் கொண் டிருக்கும். பொறுமையும் நாவடக்கமும் உடை யவர்கள் தங்கள் மன விருப்புகளை நிறைவுறச் செய்ய முடியும்.

அதிஷ்டநாட்கள்: அக். 17, 18பக. 21,25,26,29
நவ. 8,9,13,14
துரதிஷ்டநாட்கள்: அக். 19,20பக.31பக
நவ. 1,2பக.5பக.6,7,15



# மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீன இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 8ல் (அட்டமத்தில்) தாம்பர மூர்த்தியாக வலம் வருகின்றார். சூரியன் பலக் குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மைதர மாட்டாது. மேலும் இராசி அதிபன் குரு கோசார சஞ்சாரம் செய்வதும் இங்கு கவனிக்கப் பட வேண்டும். மற்றும் பிரதான கிரகங்கள் எல் லாம் கோசார சஞ்சார வலிமை குறைவதும் நன்மைதராது. பொதுவாக இவர்களின் தேக நலம்-குடும்பநலம் என்பன அடிக்கடி பாதிப்புறும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். எந்த முயற்சிகளிலும் தோல்விகள் ஏமாற்றங்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். இராசாங்க துன்பம் இனசன உறவினர்கள்-நண்பர்களுடன் பகை விரோதங்கள் கூட ஏற்படலாம். நவக்கிரக வழி பாடுகள்-தெய்வ வழிபாடுகள் செய்து வருவதால் சாந்தி பெறலாம்.

குடும்பத்தில் பிணக்குகள் வலுவாகும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் கூடுவதுடன் திடீர் நெருக்கடிகள்கூட ஏற்படலாம். புத்திரர் கவலை முதலானவையும் இவர்களுக்குத் தொல்லைதரும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலை தொடரும். முதலீடுகளில் வருமானம் குன்றும். சிப்பந்திகள்கூடத் துரோகிகளாக மாறவும் கூடும். கறுப்புமார்க்கெட் வியாபாரிகள் நட்டமடைவர்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வேலைப் பொறுப்புக்கள்கூடி இவர்களுக்கு ஆறுதல் ஏற்ப டாமல் அல்லற்படவும் நேரும். சிலர் பதவியி லிருந்து விலகினாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்குப் பயிரழிவு கூடும். உற்பத் திச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் கடன் படவும் கூடும். விளைச்சல் குறைவால் நட்டம் ஏற்படும். குத்தகை விவசாயிகள் வருந்த நேரும்.

தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை குன்றும். வேலைவாய்ப்புகள் கிடைப்பதும் அரிது. ஒப்பந்தத் தொழில்களிலும் லாபம் கிடையாது. சிலருக்குத் தொழிலுடன் சம்பந்தமான விபத்துக்கள் கூட நிகழக் கூடும்.

மாணவர் மத்தியில் வெறுப்பும் - கோபமும் ஏற்படுதலால் கல்வி வளர்ச்சி குன்றும். பரீட்சை முடிவுகள் சாதகமாக அமைவதும் கடினம். ஆனால் சுயமுயற்சி உடையவர்கள் பரீட்சையில் தேறக் கூடும்.

பெண்களுக்கு இந்த மாதமும் எண்ணங்களை நிறைவேற்றுவதில் சிரமங்களும் கஷ்டங்களும் ஏற்படும். கன்னிப்பெண்களின் விவாக முயற்சி கள் இழுபறியாகவே தொடரும். குடும்பத்தில் ஏற்படும் திடீர்ச்செலவுகளும் இவர்களுக்குத் துன்பம் தரும்.

அதிஷ்டநாட்கள்: அக். 19,20பக.23,27,28
நவ. 1,10பக.11,15
துரதிஷ்டநாட்கள்: அக். 20இர.21,22ப.
நவ. 3,4,5கா.8,9

# நீசபங்க ராஜயோகம் என்றால் என்ன?

ந. நந்தகுமார், யாழ்ப்பாணம்.

சந்: எனக்கு ஏழரைச்சனி கடைக்கூறு நடப்பதால் வெளிநாடு செல்வது கஷ்டம் என அறிகிறேன். எத்தனையாம் திகதி, மாதத்திற்குப் பின் செல்லலாம்?

நிவி: சந்தேக நிவிர்த்திப் பகுதியில் சோதிட சம்பந்தமான சந்தேகங்களுக்கு மட்டுமே விளக்கம் கூறப்படும். சொந்தப் பலாபலன்கள் இப்பகுதியில் ஆராயப்படமாட்டாது. ஆய்வு மன்றப் பகுதிக்கு வேண்டும் விபரங்களுடன் உங்கள் வினாவையனுப்பி வைக்கவும். அல்லது தகுந்த சோதிடரிடம் ஆலோசனை பெறவும்.

## சந்தேக நிவிர்த்தி 'உத்தரம்'

சி. விக்னராசா, மாவிட்டபுரம்.

சந்: நீசபங்க ராஜயோகத்தைப்பற்றி பல விதமாக விளக்கம் அறிந்தேன். அனுபவ வாயிலாகவும், கொள்கை அடிப்படையிலும் பொருத்தமான விளக்கம் தரவும். மேலும் ஒரு சாதகத்தில் ஒரு நீசக்கிரகம் நீசபங்கமடைந்தால், எஞ்சியுள்ள நீசக்கிரகங்களும் நீசபங்கமடையுமாம். இது சரியா?

நிவி: (1) ஒருவரின் ஜாதகத்தில் நீசம் பெற்ற வீட்டுக்குரியகிரகம், உதயலக்கினத்திற்கோ அல்லது சந்திர லக்னத்திற்கோ கேந்திரத்தில் (1, 4, 7, 10-ம் இடங்களில்) இருந்தால் அச்சாதகர் நீசபங்கராஜயோகத்தைப் பெறுகின்றார்,

(2) உச்சக்கிரகத்துடன் சேர்ந்திருக்கும் நீசக்கிரகம் நீசபங்க ராஜயோகத்தைப் பெறும்.

(3) நீசமடைந்த ஒரு கிரகம் இருக்கும் இராசிநாதன் உச்சம் பெற்று நீசக்கிரகத்தை நோக்கில் நீசபங்க ராஜயோகமாகும்.

நீசக்கிரகத்தின் தசாகாலம் நடக்கும்போதே நீசபங்கராஜயோகத்தின் பலாபலன்கள் கிட்டும். நீசபங்கராஜயோகம் உள்ள ஜாதகர் தமது நிலையிலும் பார்க்க ஓர் உயர்ந்த ஸ்தானத்தையும், சுகமையும் அதன் தசாகாலத்தில் அடைவர்.

ஒரு சாதகத்தில் ஒரு கிரகம் நீசபங்கமடைந்தால் எஞ்சியுள்ள நீசக்கிரகங்களும் நீசபங்கம் அடையும் எனக்கொள்ள முடியாது. நீசபங்கம் அடையக்கூடிய தன்மை இருந்தால் மட்டுமே அந்தயோகம் உண்டாகும்.

செல்வி ஜே. ஜெயலட்சுமி, தும்பளை

சந்: பொதுவாக ஒருவரின்ஜாதகத்தில் 7-ம் வீட்டையோ அன்றி 7-ம் அதிபதியையோ செவ்வாய் பார்ப்பதால் அச்சாதகருக்குக் காதல் திருமணம் நடைபெறும் என்பது உண்மையா?

நிவி: செவ்வாய் பார்ப்பதால் மட்டும் காதல் திருமணம் நிகழும் என்று கூறுவது பொருத்தமற்றது. 5-ம், 7-ம் அதிபதிகள் ஒன்றுசேர்ந்து இருப்பதும், இருகிரகங்களும் ஒன்றையொன்று திருஷ்டிக்கும் தன்மை இருப்பதாலும் மட்டுமே காதல் திருமணத்தை ஊர்ஜிதம் செய்யலாம்.

சு. கிருபாகரன் காத்தான்குடி.

சந்: தசவர்க்கங்கள் எவை என்பதையும், கிரகங்களின் சுபவர்க்கங்கள் காண்பது எப்படி என்பதையும் குறிப்பிடுக.

நிவி: தசவர்க்கங்களாவன இராசி, ஹோரை, திரேக்காணம், ஸப்தாம்சம், நவாம்சம், தசாம்சம், துவாதசாம்சம், சோடசாம்சம், திரிம்சாம்சம், ஷஷ்டியாம்சம் என்பனவாகும். இவை இராசிவர்க்கங்கள் என்றும் சொல்லப்படும். இவைதவிர சதுராம்சம், பஞ்சாம்சம், ஷஷ்டாம்சம், அஷ்டாம்சம், லாபாம்சம், சித்தாம்சம், விம்சாம்சம் போன்ற வர்க்கங்களும் உள்ளன. இராசிவர்க்கங்கள் காணும் முறை 1979 சித்திரைமாதம் முதல் மாதாமாதம் சோதிடமலரில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது. அதனைப்பெற்று வாசிக்கவும். சுபவர்க்கம் என்று ஒன்று கிடையாது,

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு - சாவகச்சேரி

# சுபமுகூர்த்தம் வைத்தல்

"ஞானி"

தொடர் 1

சைவ மக்கள் தங்கள் வாழ்க்கையில் கைக் கொள்ளும் கருமங்கள் எல்லாம் ஒரு நல்ல சுப வேளையில் செய்துவரும் வழக்கம் பண்டுதொட்டு கைக்கொள்ளப்பட்டு வருகிறது. யாதாயினும் ஒரு கருமத்தைச் செய்வதற்கு உரிய காலநேரத்தைக் கணித்து அறிந்து கொள்வதை சுபமுகூர்த்தம் அமைத்தல் என்று சொல்லுவார்கள். ஒரு குழந்தை பிறக்கும் போது எடுக்கப்படும் நேரத்தைக் கொண்டு அந்தக் குழந்தையின் எதிர்கால வாழ்க்கையின் பலாபலன்களை அறிகிறோம். இதே போல ஒரு கருமம் நடைபெறும் நேரத்தில் அமையும் கிரகநிலைகளைக் கொண்டு குறிப்பிட்ட கருமம் எவ்வளவு சிறப்பாக எதிர்காலத்தில் விளங்கும் என்பதை அறியமுடியும். எனவே ஒரு கருமத்துக்கு வகுக்கப்படும் நேரம் நற்கிரக பார்வை உள்ளதாகவும், தீயகிரகங்களின் சேர்க்கை அற்றதாகவும், அந்தந்தக் கருமத்துக்குக் குறிக்கப்பட்ட நாட்களில் அமைய வேண்டும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது.

ஒரு முகூர்த்தம் என்பது ஒரு தினத்தில் குறிக்கப்படும் குறைந்த நேர அளவைக் கொண்டதாகும். பொதுவாக முகூர்த்தம் என்றால் 2 நாழிகை (48நிமிஷம்) கொண்ட காலஅளவாகும். சில சந்தர்ப்பங்களில் காலநியதிக்கேற்ப இக்கால அளவு குறைந்தும் கூடியும் காணப்படும்.

நமது நாட்டில் வெளிவரும் கலண்டர், தினசரிப்பத்திரிகை போன்றவற்றில் தினந்தோறும் சுபநேரம் குறிக்கப்பட்டுள்ளது. இந்த சுபநேரத்துக்கு அட்டமி, நவமி, மரணயோகம் போன்ற அவசியம் விலக்கப்பட வேண்டிய விஷயங்கள் கூடக் கவனிக்கப்படுவதில்லை. இந்தக் கலண்டர்களிலுள்ள சுபநேரங்களை நம்பி எத்தனையோ மக்கள் நற்கருமங்களைச் செய்து பின் அவஸ்தைப் படுவது அந்தோ பரிதாபம்; இதனைச் சோதிட அறிஞர்கள் கவனிப்பார்களா?

சுபமுகூர்த்தம் வைக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய பொது விஷயங்களைப் பார்ப்போம்;

### சுபாசுப யோகம்

சுபாசுபயோகம் பஞ்சாங்கத்தில் தினசரி குறிக்கப்பட்டிருக்கும். இதில் சித்தயோகம், அமிர்தயோகம், சித்தாமிர்தயோகம், அமிர்த சித்தயோகம் என்பன சுபகருமங்களுக்குரிய சுப யோகங்களாகும். மரணயோகம், நாசயோகம், உற்பாதயோகம், பிரபலானிஷ்டயோகம், திரிபுஷ்கரயோகம் என்பன சுபகருமங்களுக்கு விலக்கப்பட்ட அசுபயோகங்களாம். பஞ்சாங்கத்தில் இவ்வமிர்தாதி யோகங்களுக்கு நாழிகை குறித்திருந்தால் குறித்த நாழிகைக்கு மேல் முந்தியதற்கு மாறுபாடான யோகமெனக் கொள்க. (உ—ம்: சித்தம் 15 நாழிகை என்று குறிக்கப்பட்டிருந்தால் 15 நாழிகைக்கு மேல் அசுபயோகமென்றும், மரணயோகம் 10 நாழிகை என்று குறித்திருந்தால் 10 நாழிகைக்கு மேல் சுபயோகமென்றும் கொள்ள வேண்டும்.)

### அக்கினியோகம்

ஞாயிறில் ஸப்தமி, துவாதசியும்; திங்களில் ஷஷ்டி ஏகாதசியும்; செவ்வாயில் பஞ்சமி, ஸப்தமியும்; புதனில் துவிதீயை, அஷ்டமியும்; வியாழனில் ஷஷ்டி நவமியும்; வெள்ளியில் அஷ்டமி தசமியும்; சனியில் நவமி, ஏகாதசியும் வரில் அக்கினி யோகம் என்று சொல்லப்படும்.

### உஷ்ணசிகை

அசுவினிக்கும் பூரத்துக்கும் 1-ம் பாதமும், பரணிக்கும் அனுஷத்துக்கும் 4-ம் பாதமும், உத்தராடத்துக்கும் சதயத்துக்கும் 2-ம், 3-ம் பாதங்களும் உஷ்ணசிகை என்று சொல்லப்படும்.

### கரிநாள்

ஒவ்வோர் மாதத்திலும் குறிக்கப்பட்ட சில திகதிகள் கரிநாள் எனப்படும். பஞ்சாங்கத்தில் இது குறிப்பிடப்பட்டிருக்கும்.

### இராமா

இராமா என்று குறிக்கப்பட்டுள்ள தினத்தில் இரவு நேரத்தில் சுபகருமங்கள் செய்யக்கூடாது.

## திவாமா

திவாமா என்று குறிக்கப்பட்டுள்ள தினத்தில் பகற்காலத்தில் சுபகருமம் விலக்கப்பட வேண்டும்.

## அக்கினிநாள்

சூரியன் பரணி 3-ம் பாதத்தில் பிரவேசிக்கும் காலந்தொட்டு ரோகிணி 2-ம் பாதம் வரையிலும் சஞ்சரிக்கும் காலமாகும், இது சித்திரை மாதம் நடுப்பகுதி தொடக்கம் வைகாசிமாதம் நடுப்பகுதி வரையுள்ள காலமாகும். இது பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டிருக்கும். இதனை காண்டாவனம் என்றும் சொல்வர்.

## இராகுகாலம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 4-30 | மணிமுதல் | 6-00 | மணிவரை |
| திங்கள் | 7-30 | ,, | 9-00 | ,, |
| செவ்வாய் | 3-00 | ,, | 4-30 | ,, |
| புதன் | 12-00 | ,, | 1-30 | ,, |
| வியாழன் | 1-30 | ,, | 3-00 | ,, |
| வெள்ளி | 10-30 | ,, | 12-30 | ,, |
| சனி | 9-00 | ,, | 10-30 | ,, |

இது பகலினளவு 30 நாழிகையாக இருக்கும் தினங்களுக்கே உரிய இராகு காலத்தின் அளவாகும். பகல் 30 நாழிகைக்கு குறைந்தோ கூடியோ இருப்பின் அகற்கேற்ப விதப்படுத்திக் கொள்ளல் வேண்டும். (விபவ வருஷ திருக்கணித பஞ்சாங்கம் 83-ம் பக்கத்தில் இராகுகாலத்தின் அளவு விதப்படுத்தி வெளியிடப்பட்டுள்ளது) சகல சுப முகூர்த்தங்களுக்கும் இராகுகாலம் அவசியம் விலக்கப்பட வேண்டியதாகும். இராகுகாலம் பகற்காலத்துக்கு மட்டும் உரியதேயன்றி இராக்காலத்தில் கைக்கொள்ள வேண்டியதில்லை.

## ஜன்மத்திரயங்கள்

ஜன்மநக்ஷத்திரமும் அதற்கு 10-ம், 19-ம் நட்சத்திரங்களும் ஜன்மத்திரயங்களாகும். இதில் வீடுகட்டுதல், குடிபுகுதல், விருந்துண்ணல், வியாபாரம், உழவு, தானதருமம் என்பன செய்யலாம். ஏனைய சுபகருமங்கள் விலக்கப்பட வேண்டியன.

ஜன்மநக்ஷத்திரத்துக்கு 27-ம் நட்சத்திரம் ஆகிய பகநாளும், 8-ம் இராசிக்கமைந்த 2¼ நட்சத்திரங்களும், 88-ம் பாதந்தங்கிய வைநாசிக நாளும் சுபகருமங்களுக்கு விலக்காகும்.

பெண்ணுக்கு 1-10,19-ம் நாளும், ஆணுக்கு 10-ம் நாளும் விவாகம் செய்யலாம்.

## தியாஜ்யம்

பஞ்சாங்கத்தில் தியாஜ்யகாலம் குறிக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்டுள்ள நாழிகைக்கு மேல் 4 நாழிகைவரை தியாஜ்யகாலம் என்று கூறப்படும்.

## அதிகமாதம்

இரண்டு சூரிய சங்கிராந்திகளுக்கிடையே ஒரு சாந்திரமாசம் தொடங்கி முடியுமாகில் (இரண்டு அமாவாசை வருவது) அந்தமாதம் அதிகமாதம் என்று விலக்கப்படும். அந்தமாதத்தில் உபநயனம், சௌளம், விவாகம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம், தேவப்பிரதிஷ்டை, வித்தியாரம்பம் என்பன செய்தலாகாது.

## தாராபலம்

ஜன்மநட்சத்திரம் முதல் முகூர்த்தம் அமையும் நட்சத்திரம் வரை எண்ணி 9ஆல் வகுத்த சேஷம்

| | | |
|---|---|---|
| 1 | ஆயின் | ஜன்மம் — கிலேசமுண்டாம் |
| 2 | ,, | சம்பத்து — சம்பத்துண்டாம் |
| 3 | ,, | விபத்து — ஆபத்துண்டாம் |
| 4 | ,, | க்ஷேமம் — க்ஷேமமுண்டாம் |
| 5 | ,, | பிரத்தியக்கு — காரியநாசமுண்டாம் |
| 6 | ,, | சாதனம் — தெய்வானுகூல ,, |
| 7 | ,, | நைதனம் — துக்கமுண்டாம் |
| 8 | ,, | மைத்திரம் — சுகமுண்டாம் |
| 9 | ,, | பரமமைத்திரம் — அதிகசுகமுண்டாம் |

(3-ம் பரியாயத்தில் வரும் 27வது நட்சத்திரம் அசுபம்)

## மாதாந்தம்

மாத இறுதியில் 3நாட்கள் முக்கிய சுப கருமங்கள் விலக்கப்பட வேண்டும்.

## கிரகணம்

கிரகணம் ஏற்படும் காலங்களில் அக்கிரகண தினத்துக்கு முன் பின் 3 தினங்கள் முக்கிய சுப கருமங்கள் விலக்கப்பட வேண்டும். (தொடரும்)

சுத்தகணிதப்படி ஜாதகம் குறிக்கவும், (முக்கியமாக வெளிநாடுகளில் பிறந்தவர்களுக்கு) விவாகப் பொருத்தம் பார்க்கவும், சோதிட ஆலோசனைகள் பெறவும் கீழ்க் காணும் விலாசத்தில் தொடர்புகொள்க.

நேரில் சந்திக்கும் நாட்கள்: { புதன் பகல் 10—12 மணி
சனி பகல் 10—12 மணி

இடம்: 91/5, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரச் சந்திக்கருகாமையில்
V. V. இராசாவின் றேடியோக்கடை)
யாழ்ப்பாணம்.

— இ. கந்தையா (இளைப்பாறிய அதிபர்)

# விநாயக விரதங்கள்

(சென்ற இதழ் தொடர்)

'கோப்பாய் – சிவம்'

## விநாயகர் சுக்கிரவார விரதம்

விநாயகப் பெருமானை வேண்டி நினைத்த காரிய சித்திக்காகவும், தடை நீக்கத்துக்காகவும் வெள்ளிக்கிழமை தோறும் அநுஷ்டிக்கப்படுவது இந்த விரதம். வைகாசிமாத வளர்பிறையில் வரும் முதலாவது வெள்ளிக்கிழமையில் இவ்விரதம் ஆரம்பிக்கப்படவேண்டும்.

(கந்த சுக்கிரவார விரதம் ஐப்பசிமாத முதல் வெள்ளியிலும், உமா சுக்கிரவாரவிரதம் சித்திரை மாத வளர்பிறை முதல் வெள்ளியிலும் ஆரம்பிக்கப்படுகின்றன.)

இரவு ஒருநேரம் பால்பழம் அல்லது பலகாரம் உட்கொள்வது நன்று. இயலாதவர்கள் பகல் ஒருநேர உணவுண்டு விரதமிருக்கலாம்.

## விநாயக ஷஷ்டி விரதம் (பெருங்கதை விரதம்)

கார்த்திகைமாதத் தேய்பிறைப் பிரதமைமுதல் மார்கழிமாத வளர்பிறை ஷஷ்டி வரையிலான இருபத்தொருநாள் விரதம் இது. ஆரம்பமும் முடிவும் முக்கியமே தவிர சிலகாலங்களில் நாள் குறைவதுமுண்டு.

முன்பொருசமயம் மஹாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொன்னதால் தமக்கேற்பட்ட சாபம், விநாயகரை வழிபட்டு நீங்கப்பெற்றார். இச்சாபம் நீங்கப்பெற்ற தினமாகிய மார்கழிமாத வளர்பிறை ஷஷ்டி நாளே விநாயகஷஷ்டியாகும். இந்நாளை இறுதியாகக் கொண்ட இருபத்தொருநாள் விரதத்தைப் பெருங்கதை விரதம் என்பர்.

முதல் இருபதுநாளும் மத்தியானம் ஒருபொழுதுமட்டும் போசனம் செய்யவேண்டும். இரவு பால், பழம் அல்லது பலகாரம் கொள்ளலாம். தினமும் விநாயகருக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பன நிவேதனம் செய்து விநாயகர் சரித்திரம் கூறும் பெருங்கதை விநாயகர் புராணம் முதலியவற்றைப் படித்தும் கேட்டும் விநாயகரகவல், விநாயக கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்தும் வழிபாடு செய்தல் வேண்டும்.

இறுதிநாள் விசேஷ பூஜை வழிபாடுகள் செய்து உபவாசமிருந்து மறுநாள் பாரணைசெய்ய வேண்டும்.

இவ்விரத ஆரம்பநாளில் இருபத்தோரிழையினலான விரதக்காப்பினை ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடதுகையிலும் கட்டிக்கொள்வர். இவ்விரதத்துக்கும் ஸ்கந்தஷஷ்டி விரதத்துக்கும் மட்டும் விரதாரம்பத்தில் பவித்திர மணிந்து சங்கல்பம் செய்யும்போது காப்புக்கட்டும் வழக்கம் உண்டு. இக்காப்பு விரதம் முடிந்த மறுநாள் அதாவது பாரணையிலன்று காலை பவித்திர விசர்ஜனத்துடன் அவிழ்க்கப்பட வேண்டும்.

(வரலக்ஷ்மி விரதம், கௌரி விரதம் ஆகியவற்றுக்கு விரதமுடிவில் காப்புக்கட்டி அடுத்த வருட விரதநாளில் தான் அவிழ்ப்பது வழக்கம்.)

கந்தபுராணம், லிங்கபுராணம், உபதேசகாண்டம் ஆகியவற்றிற் காணப்படும் இவ்விரத மகிமை பிள்ளையார்கதை என்றபெயரில் வரதபண்டிதரவர்கள் தனிநூலாகவும் செய்திருக்கிறார்.

முன்பொருசமயம் விக்கிரமாதித்த மன்னனின் மனைவியருள் ஒருத்தியான இலக்கணசுந்தரி என்பாள் தான் அநுஷ்டித்து வந்த விநாயகஷஷ்டி விரதத்தை இடையிலே கைவிட்டு அந்த விரதக் காப்பையும் அவிழ்த்து வீசிவிட்டாள். அன்றிலிருந்து அவள் அனேக கஷ்டங்களடைந்து மன்னனால் விலக்கப்பட்டுக் காட்டையடைந்தாள். அவள் வீசியகாப்பு ஒரு அவரைக்கொடி மீது விழுந்தது. அவரைக்கொடியோ அளவின்றிச் செழித்து வளர்ந்தது. அந்த அவரைக்கொடியிற் கிடந்த விரதக்காப்பைக் கண்டெடுத்த பணிப்பெண்ணொருத்தி அதனைக் கையில்கட்டி விரதமநுஷ்டித்தாள். அவ்விரத பலனாக அவளை மன்னன் மணந்து அரண்மனை சேர்ந்தாள்.

காட்டில் அலைந்த இலக்கணசுந்தரி அங்கொரு மூதாட்டியின் அறிவுரைப்படி விநாயகஷஷ்டி விரதத்தை மறுபடி தொடங்கி முறைப்படி நோற்றாள். அந்நாளில் காட்டிற்கு வேட்டையாட வந்த விக்கிரமாதித்த மன்னனும் களைப்புற்றுத் தண்ணீரருந்த இவளிருந்த குடிலை நாடினான். அங்கு இலக்கணசுந்தரியைக் கண்டு மறுபடி அவளை மணம்செய்து அழைத்துச் சென்றான்.

இருபத்தொரு வருடம் இவ்விரதம் அநுஷ்டித்த பின் உத்தியாபனம் செய்யலாம். இயலாதவர்கள் ஏழுவருடமாவது கைக்கொள்ளலாம்.

(வளரும்)

முக்கிய குறிப்பு:-

'சோதிடமலரில்' வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆ–ர்


வரப்பெற்றோம்

மட்டுவில் தந்த

**பண்டிதமணி சி. க.**

சான்றோர்கள் இல்லாத காலத்தே வாழ்பவர்கள் தம் வாழ்வை அத்தகையோர்களோடு சேர்ப்பதற்கு அவ்வுயர்ந்தோரின் குணநலங்களையும் அவர்கள் நூல் கருத்துக்களையும் அவர்கள் வாழ்க்கை நெறிகளையும் வரலாறுமூலம் நாம் அறிந்து கொள்வதற்கேற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளதே ''மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க.'' என்னும் பண்டிதமணியின் வாழ்க்கை நூலாகும். இந்நூலை வெளியிட்டதன் மூலம் வெளியீட்டாளரின் அரிய முயற்சி பண்டிதமணிக்கு நன்றிக்கடனுமாகிறது. சைவத்தமிழ் மக்கள்யாபேரும் பண்டிதமணியின் வாழ்க்கையை அறிந்து அவரின் சிந்தனைக்கேற்ப நடைமுறை வாழ்க்கையை அமைப்பதற்கு அவசியம் வாசிக்கவேண்டிய சிறந்த கைநூல் என்று இதனைத் துணிந்து கூறலாம். அழகிய அச்சுவேலைகளுடன் தெளிவான அமைப்பில் எல்லாப் புத்தகக்கடைகளிலும் பெறக்கூடிய நூலாக மிளிர்கிறது.

வெளியீடு: கா. சிவபாலன்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.


# நவராத்திரி நன்னாளே?

— செல்வி பூங்கொடி அருளம்பலம் —

தெய்வத் திரு நாயகியர்
தாழ் பணிந்து நோன்பியற்றி
உய்ய வழி வேண்டுதற்கு
உகந்த தினம் நவராத்திரி.

சிவன் மால் பங்கையன்
தேவியராம் திரி சக்தியர்
வீரமொடு செல்வம் கல்வி
வையத்தில் எமக் களிப்பார்.

பொன்னார் திரு மேனியள்
புதுநிலவுத் தண் ஒளியாள்
கண்களில் வீரக் கனலுடையாள்
மலைமகள் நோன்பு மூன்றுதினம்.

கோழைக்கும் வீரம் தரும்
கொற்றவையாம் துர்க்கை அவள்
கோலத் திருவுரு வாள்
மலைமக ளின் தாழ்பணிவோம்.

செங்கமல மலர் அணையாள்
செல்வத்தின் பேர் அரசி
பங்கை யத்தாள் பாதங்களை
கெஞ்சு தினம் மூன்று.

வஞ்சிமிலா நெஞ் சுடனே
கெஞ்சி நின்றால் அவள்பாதம்
மஞ்சி வரும் செல்வம்
பஞ்சமிலா வாழ் வுயரும்.

முல்லை மலர் மேனியள்
கல்விக் கலை அரசி
வெள்ளை மலர் மீதமர்ந்த
கலைமகளின் தாழ் பணிவோம்.

அள்ளித் தருவாள் கல்வியினை
ஆயகலை அறுபத்து நான்கினை
வெள்ள மெனப் புகழ்சேர
கலைவாணி தாழ் பணிவோம்!

ஒன்பது இரவு அனைத்தும்
அன்புடன் சக்தி யர்த்தம்
நோன்பினை நாமி யற்றி
வீரமொடு செல்வம் கல்வியுமடைவோம்.

# அதிஷ்ட எண் ஞானம்

— இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். —

தொடர் 7 (முன்தொடர்ச்சி)

**வரிசைக்கிரம எண்களும்- ஆதிக்க எண்களும் (எண்களின் இருவேறுபட்ட நிலைகள்)**

இனி இவ் எண்களின் இரு வேறுபட்ட பிரயோகம் பற்றிப் பார்ப்போம்.

முதலாவது வரிசைக்கிரமம்—
இரண்டாவது கணியம் அல்லது பெறுமதி—

நாம் 12 மாதங்களைச் சொல்லும் போது சித்திரை, வைகாசி, ஆனி என்று ஒரு ஒழுங்கில் கூறுவோம். நாற்பேறுகளைக் கூறும்போது அறம், பொருள், இன்பம், வீடு என்ற ஒழுங்கில் தான் சொல்வோம். ஏழு நாட்களைக் கூறும்போது ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் என்ற ஒழுங்கில் கூறுவோம். ஆங்கில மாதம் ஜூலை என்பதற்குப் பதிலாக 7ம் மாதம் என்றும் சொல்லலாம். வாரத்தின் 4ம் நாள் என்பதற்குப் பதிலாக புதன்கிழமை என்று சொல்லலாம். இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அஃதாவது ஒன்றை அதன் பெயரினுல் குறிப்பிடுவதற்குப் பதிலாக அதன் வரிசைக்கிரம எண்களினுலும் குறிப்பிடலாம் என்பதாகும்.

அடுத்து எண்களின் கணியப் பிரயோகத்தை எடுத்துக் கொள்வோம். நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை, முகத்தல் அளவை, கால அளவை ஆகிய பல தன்மைகளில் கணிய அளவுகள் உண்டு. 3 இருத்தல் சீனி என்பது கணிய அளவு. 2மீற்றர் துணி, 5லீற்றர் பால், 2மணி இடைவேளை என்பவற்றிலும் வரும் எண்கள் கணிய அளவுகளையே தருகின்றன. ஒரு புகையிரதம் தன் பிரயாணத்தின் 4வது கிலோ மீற்றரில் தடம் புரண்டது என்று சொல்லும் போது 4 என்பது எண்ணின் வரிசைக்கிரமப்பாவிப்பிலும் ஒரு புகையிரதம் தன் பிரயாணத்தில் 4 கிலோ மீற்றரை 4 நிமிடத்தில் கடந்தது என்று சொல்லும் போது 4 என்பது கணியப் பாவனையிலும் வருவதை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். ஒரு பொருளின் வரிசைக்கிரம எண்ணிற்கும், அதன் தன்மைகளை அளவிடும் கணிய எண்ணிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது மிக முக்கியமாகும்.

தொடர் 8

மாருத இயக்கமும் நுண்ணிய தொழிற்பாடுகளும் கொண்ட கிரகங்களை அறிந்தோம். பகுத்தறிவோடு கூடிய மனிதனுக்கு தன் ஐம்புலன்களாலும் அறியக்கூடியவற்றைவிட மேலான அறிவு சக்தி உலகில் உண்டென்றும் அவற்றை அனுபவத்தால் ஓரளவு உணரக்கூடியதாக உள்ளதென்றும் பார்த்தோம். கிரகங்களின் அதிதேவதை எனப்படும் உயிர்ப்புச்சக்தி, மனிதனின் அதிதேவதை எனப்படும் உயிர்ப்புச்சக்தியை வழிநடத்துகின்றன என்றும் அவற்றை தொடர்புபடுத்தும் எண்களின் நுட்பங்களை பற்றியும் கவனித்தோம். அதன்படி மனிதனின் உயிர்ப்பு சக்தியின் எண்ணையும் கிரகங்கள் ஒவ்வொன்றின் உயிர்ப்புச்சக்தியின் எண்களையும் இப்போது அறிந்து கொள்வோம். அதிஷ்ட எண்ஞானத்தில் இது மிகப் பிரதானமான பகுதியாகும்.

### ஹோரரை முறைத்தத்துவம்

உயிர்ப்புசக்தியை அல்லது அதிதேவதையை குறிக்கும் எண்களையே அக்கிரகத்தினதோ, மனிதனதோ ஆதிக்க எண்கள் என்று சொல்லுகிறோம். சென்ற முறை விளக்கியபடி கிரகங்களை வரிசைப்படுத்தி அவற்றைக் குறிப்பிட வரிசைக்கிரம எண்களை சிலர் பாவனைப்படுத்தியுள்ளனர். இக்கிரகங்களை எங்ஙனம் வரிசைப்படுத்தி உள்ளார்கள் என்பதை அறிய நாம் ஹோராமுறையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஹோரை, ஹோரா என்ற சொல்லில் இருந்து தான் Hour என்ற ஆங்கிலச் சொல் வந்திருக்க வேண்டும். எந்த ஒரு தினத்திலும் சூரிய உதயத்திலிருந்து ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு கிரகத்தின் ஹோரை நடைபெறுகின்றது. இராகு, கேது தவிர்ந்த ஆக்கச்சத்தி உள்ள ஏனைய 7 கிரகங்களின் ஹோரைகள் ஒரு மாருத வரிசைக்கிர

மத்தில் தொடர்ந்து தாக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. பூமியில் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு கிரகத்தின் தாக்கம் வலுவாக உள்ளதென்பதை தம் அனுபவ உணர்வால் கண்டறிந்த மேதைகள் அந்தந்த மணித்தியாலத்தை அந்தந்த கிரகஹோரைக்கு உரியதாக வகுத்துக்காட்டியுள்ளனர். இந்த ஹோரையின் வரிசை ஒழுங்குப்படி கிரகங்களாவன ஞாயிறு எனப்படும் சூரியன் அடுத்து வெள்ளி, புதன், திங்கள் எனப்படும் சந்திரன், சனி, வியாழன், செவ்வாய் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட தினத்தின் முதல் மணித்தியாலம் என்ன ஹோரை நடக்கிறதோ அந்த ஹோரைக்குரிய கிரகத்தின் பெயரால் அத்தினமும் அழைக்கப்பட்டது. சூரியோதயத்தில் இருந்து முதலாவது மணித்தியாலம் சூரிய ஓரை நடந்தால் அத்தினத்திற்கு ஞாயிற்றுக்கிழமை என்று பெயர். அடுத்து 6வது ஹோரை சுக்கிரஹோரையாகும். அடுத்து 6வது ஹோரை புதன் ஹோரை. இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை சூரியஹோரையின் 25வது மணித்தியாலமான மறுநாள்காலை சந்திரஓரை. அதாவது திங்கட்கிழமை வரும். இவ்வாறே ஏனைய நாட்களும் வருகின்றன.

கிரகங்களின் தங்கச் செறிவு வன்மையைக் குறிக்கும் ஹோரையின் வரிசை ஒழுங்கும் அந்த அடிப்படையில் அமைந்த நாள்வரிசையும் வேறு வேறு என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு ஹோரை ஒழுங்கு தேவைப்படவில்லை. ஆனால் ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்ற நாள் ஒழுங்கு மிக அவசியமாகி மனதில் அதுவே மனப்பாடம் ஆயிற்று. பின்னர் 7 கிரகங்களின் பெயர்களைச் சொல்லும்போதும் இந்த நாள் ஒழுங்கிலேயே கிரகங்களையும் ஒழுங்குபடுத்தி சொல்லலாயினர். கிரகங்களின் இந்த வரிசைக்கிரம ஒழுங்கில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. நவக்கிரக கோளறு பதிகம் பாடிய ஞானசம்பந்தப்பெருமானும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்ற இதே ஒழுங்கில் தான் கூறியிருக்கிறார். இந்த ஒழுங்கு வரிசையில் சூரியன் 1வது, சந்திரன் 2வது, செவ்வாய் 3வது, புதன் 4வது, வியாழன் 5வது, வெள்ளி 6வது, சனி 7வது ஆகவும் நாட்களில் குறிப்பிடப்படாத இராகு கேதுக்களை 8வது 9வது ஆகக் குறிப்பிட்டனர். இந்த முறையிலேயே பழைய இந்திய சோதிட நாட்கள் எல்லாவற்றிலும் இந்த ஒழுங்கு முறை பாவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக- சோதிடப்பழைய நூலான சில்லறைக்கோவை பலகறை ஆருடம் பற்றிக்கூறுவதற்கு எந்தக்கிரகத்தை அறிந்து ........ ........ வேண்டும் என்பதை இதே ஒழுங்கு வரிசையில் எண்களாலேயே கிரகங்கள் சுட்டப்படுகின்றன.

மேலும் பராசமுனிவரின் நூலிலும் வராஹமிஹிரர் எழுதிய பிரஹத் ஜாதகத்திலும் கிரக அவஸ்தைகளைக் கூறும் 7ம் அத்தியாயத்திலும் வரிசைக்கிரமப்படி கிரகங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவர்களெல்லாம் கிரகங்களின் பலனை அறிய வரிசையில் உள்ள எண்களைப் பாவித்துள்ளனரே தவிர இந்தக் கிரகத்தின் முழுப்பலப் பெறுமதி இந்த எண்கள் தான் என்று எவ்விடத்திலும் சொல்லவில்லை. வெவ்வேறுபட்ட விசயங்களுக்கு வேறுபட்ட முறைகளைக் கையாள 2வது எண்ணை செவ்வாய்க்குகூட கொடுத்துள்ளதை அறியலாம்.

நான் மேலே விளக்கியபடி இக்கிரகங்களின் இந்தவரிசைக்கிரம எண்களும் கிரகங்களின் சக்தி தன்மை வலிமை என்பவற்றைக் குறிக்கும் உயிர்ப்புச்சக்தி அதாவது அதிதேவதையின் கணிய எண்களும் வேறுவேறாகும். கிரகங்களின் இக்கணிய எண்ணே கிரகங்களின் ஆதிக்க எண்ணாகும். இக்கிரகங்களின் ஆதிக்க எண்களை அதிஷ்ட எண் ஞான மூதாதையர், மேதாவிகள், ஞானிகள் நுண்ணுணர்வால் தெய்வீகஅறிவால் கண்டுநமக்கு வகுத்துள்ளார்கள். அந்த அடிப்படையிலான ஆதிக்க எண்களின் பிரயோகமும் பலனும், எத்தனையோ நூற்றாண்டுகளாக மிக ஆச்சரியமான முறையில் சரியாக உள்ளன. அதன்படி கிரகங்களின் ஆதிக்க எண்களான சூரியன்- 1 சந்திரன்- 2 வியாழன்- 3 இராகு- 4 புதன்- 5 வெள்ளி- 6 கேது- 7 சனி- 8 செவ்வாய்- 9 ஆகும். சூரியன், சந்திரன், வெள்ளி, ஆகிய மூன்று கிரகங்களின் வரிசைக்கிரம எண்ணும், ஆதிக்க எண்ணும் தற்செயலாக ஒரே எண்களாக அமைந்துள்ளதை நாம் இங்கு குறிப்பாக கவனிக்க வேண்டும். நாம் இங்கு ஆதிக்க எண்களையே எமது எண்ஞானத்தின் அடிப்படையாகக் கொள்ளுகின்றோம். இது திட்டவட்டமான முடிவாகும்.

## பரிவர்த்தன யோகம்

கிரகங்கள் ஒருவருக்கொருவர் வீடுகொடுத்து மாறியிருப்பது (அதாவது சந்திரன் வீடாகிய கடகத்தில் வியாழனும், வியாழனின் வீடாகிய மீனத்தில் சந்திரனும் இருப்பதுபோல) பரிவர்த்தனயோகம் எனப்படும். இதனால் ஜாதகருக்கு ஆயுள்பெலம், தேகசுகம், செல்வாக்கு என்பன விருத்திபெற்று நற்பலன்களைக் கொடுக்கும்.

# ஆய்வு மன்றம்

த. அருணா. வாழைச்சேனை.

உங்கள் ஜாதகப்படி 9-ம், 10-ம் அதிபர்கள் சேர்ந்து இருப்பது தர்மகர்மாதிபதி யோகமும், சூரியன், புதன் சேர்ந்திருப்பதனுல் புத ஆதித்தயோகமும் உண்டாகின்றது. எனவே கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் கிட்டும். 10-ம் வீடு புதனுக அமைவதால் கணிதத்துறை, கணிதத்துடன் சம்பந்தப்படும் தொழில்கள் அனுகூலமாகும்.

செல்வி பா. லக்ஷ்மி, திருகோணமலை.

உங்கள் சகோதரியின் ஜாதகப்படி 7-ம் அதிபன் 5-ம் வீட்டில் இருப்பதனுல் தான் விரும்பியவரையே திருமணம் செய்வா. அவவின் சொந்த விருப்பத்தில் மற்றையவர்களின் தலையீடு எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்த மாட்டாது. மேலும் 12 வயது வித்தியாசம் அவ்வளவு பெரிதல்ல. 15, 16 வயது வித்தியாசத்தில் கூட தம்பதிகள் உள்ளனர். எனவே அவவின் விருப்பப்படி திருமணத்தை நடத்துவதுதான் சிறந்தது. 7-ம் வீட்டைச் சனி பார்ப்பதால் குற்றமுள்ள மணமகன் வரவேண்டும் என்பது பலன்.

V. பரமானந்தம், புத்தளம்.

உங்கள் ஜாதகப்படி லக்கினுதிபதி புதன் 6-ல் இருப்பதால் பொதுவாக தேகசுகக் குறைவு, மனத்திடம் குன்றியிருக்கும். 7-ல் சூரியன், சனி, செவ்வாய் இருப்பதும 7-ம் அதிபதி 12-ல் இருப்பதும் திருமண வாழ்க்கையில் சிக்கல்களும், இழுபறிகளும், தாமதமும் உண்டாகும். மணப்பெண்ணின் குணநலம் நன்ருக அமையினும் திருமணத்தில் இழுபறி உண்டாகும். தொழில்வளம் சிறப்பானதாக இருக்காது.

M. அல்போன்ஸ் ஸ்ரீஜெயன்பந்துலு, கொழும்பு-13.

நீங்கள் என்ன கேள்வி கேட்கிறீர்கள் என்பதை எழுதாமல் நாம் என்ன பதிலைத்தருவது?

சா. சோமதேவசர்மா, நீர்வேலி.

உங்களுக்கு 10-ம் அதிபதி சூரியன் சரராசியில் இருப்பதால் நிரந்தரமான தொழில் அமைவது கஷ்டம். வியாழன் 9-ல் உச்சம் பெறுவதனுல் சமயத்துறையில் ஈடுபடுவது நன்ருக இருக்கும். அதில் உங்களுக்கு கூடிய நாட்டமும் ஏற்படும். 2-ல் கேது இருக்க சனி பார்ப்பதால் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைவது கடினம். உதய லக்கினமும், ஏழாம் அதிபதியும் பாபகர்த்தரி யோகம் பெறுவதும் விரும்பத்தக்கதல்ல.

அ. லோகேஸ்வரன், தொண்டமானாறு.

உங்கள் தூரதேசப்பிரயாணம் ஏறக்குறைய டிசம்பர் அளவில் கைகூடக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றது.

சு. மலரவன், சுழிபுரம்.

உங்கள் ஜாதகப்படி லக்னுதிபதி திரிகோணம் பெறுவதால் தொழில் மேன்மை உண்டு. தற்போது 11-ல் இருக்கும் சந்திரனின் தசை நடைபெறுகிறது. சந்திரன் தனஸ்தானுதிபதியாகி 11ல் இருப்பதால் நிதிநிலைமையில் முன்னேற்றம் கிடைக்கும்.

இ. ந. இந்திரன், தாவடி கொக்குவில்.

உங்கள் ஜாதகப்படி லக்கினத்தில் கேது, 7ல் செவ்வாய், ராகு என்பன இருப்பதால் திருமணம் இலகுவில் நடைபெருது. பலவித சிக்கல்களும், இழுபறிகளும் உண்டாகும். 7-ல் வீடு சனியின் வீடாக அமைவதால் திருமணத்தில் பூரணதிருப்தி கிட்டாது. எனினும் 2-ம் வீட்டை குரு பார்ப்பதால் திருமணம் கட்டாயம் உண்டு. 1989இல் நடைபெற இடமுண்டு.

திருமதி ப. தவமணி, வல்வெட்டித்துறை.

உங்களுக்கு சந்திரன் அட்டமத்திலும், கேது 6 இலும் ஜாதகத்தில் இருப்பதால் சுகக்குறைவு அநேகமாக இருக்கும். லக்கினுதிபதி பெலம் பெறுவதால் ஆயுட்பெலம் உண்டு. நோய் பூரணமாகக் குணமாகும் எனக் கூறமுடியாது.

இ. ந. இந்திரன், தாவடி, கொக்குவில்.

உங்கள் ஜாதகப்படி வடக்குத் திசையில் பெண் வந்து அமைவா. பெண்ணின் நிறம் நன்ருக அமையும். ஆயினும் சொந்தப் பெண்ணுக இருக்காது. மனத்துணிவு உள்ளவராயிருப்பார்.

சு. கலாபதி, கல்வயல், சாவகச்சேரி.

தற்போது நடக்கும் சுக்கிரதசையில் அந்நிய நாடு செல்லும் வாய்ப்புக்கள் இல்லை. 1988 நவம்பர் வரை சுக்கிரதசை நிகழும். இக்காலம் வீணன செலவுகளே உண்டாகும். சிறிது காலம் பொறுத்து 1989 பிற்பகுதியில் முயற்சித்தால் ஓரளவு கருமம் கைகூடும். ஏழரைச்சனியும் நடப்பதனுல் சனிக்கு வழிபாடு செய்து வரவும்.

Registered as News Paper at the G. P. O. Sri Lanka.




## "யோகாசனம்"

"யோகாசனம் உடலையும் உயிரையும் பாதுகாக்கின்றது."

பளிச்சிடும் வெண்மைக்கு நுரைவளம் கூடிய மில்க் வைற் நீலசோப்பை வாங்கி உபயோகியுங்கள்.

ஒரு கட்டி விலை ரூபா 3/- மட்டுமே!

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி யோகாசன விளக்கப்படத்துடன் கூடிய புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும் 'மில்க்வைற்'

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமல் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பதே எமது அவா. எத்தனையோ கஷ்டங்கள் ஏற்படினும் மலரை வாடவிடாமல் பாதுகாக்க வேண்டியது வாசகர்களாகிய உங்கள் கடமையன்றோ; இதுவரை புதிய மலருக்கான சந்தாவைச் செலுத்தாதவர்கள் உடன் சந்தாவைச் செலுத்திப் பதிவு செய்வித்துக் கொள்வதோடு புதியசந்தாகாரர்களையும் சேர்த்து ஊக்கமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ 54-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 90-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, 192-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, 237-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 4-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:
உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thiruckanitha Nilayam. Madduvil, Chavakachcheri; Sri Lanka. Phone: 280